தென்மொழி

போராட்டம் நடத்துங்கள்!

போராட்டம் நடத்துங்கள்—உரிமைப்
போராட்டம் நடத்துங்கள்!
ஊராட்டம் காணும்படி
உண்மைதான் வெல்லும்படி (போராட்)

ஊராள வந்தவர்கள்
உமைச் சுரண்டி வாழுகின்றார்!
தாராள மனத்துடனே
தமை வளர்த்துக் கொள்கின்றார்! (போராட்)

உழைப்பவர்க்கு நன்மையில்லை!
உழுதவர்க்கு மிஞ்சவில்லை!
பிழைப்பதுவும் அருமையடா!
பேசுவதோ பெருமையடா! (போராட்)

உரிமைக்கும் கதவடைப்பார்!
'உம்' மென்றால் சிறைவைப்பார்!
நரிமைகளும் நாய்மைகளும்
நாடாள வந்தனடா! (போராட்)

அதிகாரக் கூட்டமெல்லாம்
அடக்குமுறை செய்வதுவோ!
எதிரேறிக் கேட்பவர்கள்
இன்னலுக்குள் ளாவதுவோ! (போராட்)

பொருள்படைத்த முதலாளி
பூட்டிவைப்பான் பெருநிலத்தை!
இருள்புகுந்த குடிசையிலே
ஏங்குகின்றான் தொழிலாளி! (போராட்)

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(ம.கோ. இரா. ஆட்சிக்காலத்தில் (1981) மனுநூல் எரிப்புப் போராட்டம் நடத்தித் தளைப்பட்டுக் கோவைச் சிறையில் இருந்த போது எழுதப்பெற்றது.)

உள்ளே...

செயலலிதாவின் ஆட்சிக் கலைப்புக் கோரிக்கையும் தமிழ்நாட்டரசின் முன்னுள்ள கடமையும்!

அறுபருவத் திருக்கூத்து (பின்பனிக் காலம்)

நீர் நிலவும் நிலவு!

இன்னே எழுக செயல் முனைப்புற்றே!

பைந்தமிழுக்கு இரண்டகம் செய்தவர் பத்தவச்சலம் மட்டும்தானா?

விளங்குமா நம்நிலம்?

பாவலரேறு தமிழ்க்களத்தை நோக்கி .... (மடல்கள்)

செய்திகள்

சுவடி - 30
ஓலை - 4
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

பொதுமை உலகம் புதுக்குக இளைஞனே!

சாதிக் குப்பையைச் சாம்ப லாக்கு;
பாதியை அறிவுப் பயிருக்கு உரமிடு!
மீதியை ஒற்றுமை மேன்மைக்கு உரமிடு!
இனமும் ஒன்றுதான்; இறையும் ஒன்றுதான்!
மனமும் ஒன்றுதான்; மக்களும் ஒருவரே!
இறைபல இருந்ததால் மதம்பல விருந்தன.
மதம்பல விருந்ததால் குலம்பல வெழுந்தன;
குலம்பல வெழுந்ததால் கொடுமைகள் நிறைந்தன;

உலகம் எல்லாம் ஒருகுலம் என்னும்
உயர்ந்த கொள்கைக்கு உரமிட்டு வளர்க்க!
அயர்வின்றி உழைக்க! ஆக்கம் உறுதி
உழைப்பிலார் சேர்த்த உடைமையை உலுக்குக!
உழைப்போர் இழந்த உடைமையை மீட்க!
வயிறு காயும் வறுமையைக் கொல்க!
உயிருவந் தூட்டும் உழவரைப் பேணுக!
பொதுமை உலகம் புதுக்கிடும்
புதுமை நினைவொடு புறப்படு இளைஞனே!

(கனிச்சாறு மூன்றாம் தொகுதியிலிருந்து)

பெருஞ்சித்திரனார் நூல்களை நாட்டுடைமை ஆக்குக!

பாவலரேறு தமிழ்க்களத்தைத் தமிழ்நாட்டரசே நிறுவ வேண்டும்!

தமிழகத் தமிழாசிரியர் கழகம் தீர்மானம்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்குவதோடு, தமிழ் நாட்டரசு பாவலரேறு தமிழ்க் களத்தை நிறுவுதலும் வேண்டும் என்று தமிழ் நாட்டரசை வற்புறுத்தி, சென்னையில் நடைபெற்ற தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலச் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழகத் தமிழாசிரியர் கழக மாநிலச் செயற்குழுக் கூட்டம் தி.பி. 2029 மீனம் 22 அன்று (5.4.98) சென்னை–புரசைவாக்கம் இராட்டிலர் தெருவிலுள்ள மாநகராட்சி மேனிலைப் பள்ளியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழகத் தமிழாசிரியர் கழக மதிப்பியல் தலைவர் புலவர் கி.த. பச்சையப்பன் அவர்கள் முன்மொழிந்த மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:

○ தமிழ்நாட்டரசு, மொழிப்போர் ஈகியர்க்கு நினைவுமண்டபம் எழுப்புதல் வேண்டும். பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் உள்ளிட்ட எல்லாத் துறைகளையும் தமிழ்வாயிலாக கற்பித்தற்குத் தமிழ்நாட்டரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். ○ மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அரசை மாற்றும் உரிமை படைத்தவர்கள் மக்களே. நடுவணரசு தலையிட்டு — 356 ஆவது அரசியற் சட்டப்பிரிவைக் கொண்டு கலைப்பது கூடாது—இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேறின.

T. 5851

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

தென்மொழி

மொழி—இனம்—நாடு

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி. 30) தி.பி. உ0உகூ - மேழம் (ஏப்பிரல்-'98) (ஓலை.4

செயலலிதாவின் ஆட்சிக்கலைப்புக் கோரிக்கையும் தமிழ்நாட்டரசின் முன்னுள்ள கடமையும்!

தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி நடத்தி வரும் தி.மு.கழக அரசைக் கலைத்து விடவேண்டும் என்று மேனாள் முதலமைச்சரான செயலலிதா பெரிதும் பரபரப்பாகச் செயல்படுகிறார். தில்லியில் பாரதிய மக்கட் கட்சிக் கூட்டணி ஆட்சியமைக்கத் தாமும் தமது கூட்டணியினரும் ஆதரவு கொடுப்பதற்கான பேரம் முதல், குடியரசுத் தலைவருக்குத் தொலைவரி ஈறாக அவர் இக் கலைப்பு முயற்சியை முனைப்பாகத் தொடர்கிறார்.

நடுவணரசு அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் அ.தி.மு.க. வினரும், அவர்தம் கூட்டணிக் கட்சிகளைச் சார்ந்தோருமான சிலர், குற்றவழக்குகள்—அறமன்ற நடவடிக்கைகளின்றும் செயலலிதாவை 'அரசியல்'வழி விடுவிப்பதும் எப்படியாவது தி.மு.கழக ஆட்சியைக் கலைப்பதுமே தாம் பதவி பெற்றதன் பயன் என்னும் கருத்தில் தாண்டிக் குதிக்கின்றனர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள எத்தனையோ கறுப்புச் சட்டங்களுள் 356-ஆவது பிரிவும் ஒன்று. அதை நீக்க வேண்டும் என்று அவ்வப்போது சிலர் குரல் கொடுப்பதும் ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் 'நாங்கள் அதைத் தவறாகப் பயன்படுத்தமாட்டோம்' என்று

உறுதிமொழிவதும் வாடிக்கையானவை. 'தவறு', 'சரி' என்பவற்றுக் கெல்லாம் பொருள், வாய்ப்புக்கேற்ப வரையறுக்கப்படுவன. ஆதலால் அரசியல் காழ்ப்புணர்ச்சி மேலிடும் போதோ, அரசியல் நெருக்கடிகளுக்கு ஆட்பட்டோ ஏதேனும் காரணத்தைக் கற்பித்துக் கொண்டு கலைப்பு நடவடிக்கையை மேற்கொள்வது பலமுறை நடந்துவிட்டது.

சென்றமுறை வன்முறை என்றுகூறி, ஆளுநரின் பரிந்துரை யறிக்கை இல்லாமலேகூட 'அல்லாத வழி'யில் திரு. வெங்கட்டராமன் தி.மு.க. ஆட்சியைக் கலைத்துத் தமது ஆசைநிறைவேற வழிவகுத்துக் கொடுத்தமையை எண்ணியே இப்போதும் சட்டம்–ஒழுங்கு கெட்டு விட்டதாகக் கூறி, இங்குள்ள ஆட்சியைக் கலைத்துவிடக் கருதி 'நாட்கள் எண்ணப்படுகின்றன' என்கிறார் செயலலிதா.

கோவை குண்டுவெடிப்புக்குப் பின் அரசின் முனைப்பான நடவடிக்கைகளின்மூலம் தமிழ்நாட்டில் இயல்பான நிலை நிலவுவது கண்கூடு. ஒருசில வன்முறை நிகழ்ச்சி நடப்பதாகவே வைத்துக் கொண்டாலும் அதற்காக நாட்டில் சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்ட தென்று ஆட்சியைக் கலைத்துவிடுவது எப்படித் தீர்வாகும்?

1965-இல் இந்தி வல்லாண்மையை எதிர்த்துப் போராடிய மாணவர்கள் பன்னூற்றுவரைச் சுட்டுக் கொன்றார் அற்றை முதலமைச்சர் பத்தவச்சலம். அரசு செயலிழந்து, நாடே நிலைகுலைந்த போதுங்கூடத் தமிழ்நாட்டரசைக் கலைக்க வேண்டும் என்ற குரல் எவராலும் எழுப்பப்பட்டதில்லை. அடுத்து வந்த 1967 பொதுத் தேர்தலேதான் தமிழ்நாட்டில் பேராயக்கட்சியின் ஆட்சிக்கு நிலையாக முடிவு கட்டப்பட்டது; பத்தவச்சலம் அரசியலில் மீண்டும் தலையெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது தில்லியிலும் பேராயக் கட்சி ஆட்சியே நடைபெற்றதனால் அத்தகைய கோரிக்கை கூட எழவில்லை. நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை யென்றால், வன்முறைக்குச் சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டதாகக் கூறி ஆட்சியைக் கலைப்பது தீர்வாகாது என்பது தானே வெளிப்படுகிறது.

தமிழ்நாட்டில் வன்முறை என்று கூறிச், சென்ற முறை ஆட்சியைக் கலைத்தபின், ஆளுநர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திற்றான் மேனாள் தலைமையமைச்சர் இராசீவ் இங்கே படுகொலை செய்யப் பட்டார். அதையொட்டி இங்கு நடந்த வன்முறைக்கு அளவுண்டா? வீடு வாசல்களை இழந்தோரும் தாக்குதலுக்கு ஆளானோரும் எத்தனைப்பேர்! எத்தனைக் கடைகள் சூறையாடப் பட்டன! ம.கோ. இராமச்சந்திரன் நோய்வாய்ப்பட்டு இறந்தபோதுங்கூட இங்கே நடந்த வன்முறை நிகழ்ச்சிகள் கொஞ்சமா? இவற்றுக்காகவெல்லாம், சட்டம்–ஒழுங்கு கெட்டுவிட்டதாக இங்கே யார் ஆட்சியை யார் கலைத்தார்கள்!

பெரும்பாலான பொதுநல அமைப்புகளும் தேர்தல் அரசியலில் ஈடுபடாத இயக்கங்களும் செயலலிதாவின் அறக்கொடிய கோரிக்கை நடவடிக்கையைக் கண்டிக்க ஏனோ தயங்குகின்றன; முறைகேடானது என்று தெரிந்தாலும் வாயடங்கி நிற்கின்றன.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்கள் பலபடி மேலேயே போயிருக்கிறார். செயலலிதாவின் பார்ப்பனிய ஓலம் அவர்தம் பகுத்தறிவுச் செவியிற் படவில்லை. பாரதிய மக்கட் கட்சியின் கூட்டணி ஆட்சிக்குக் கைகொடுக்கத் தமிழ்நாட்டு நலங்களை கருதிச் செயலலிதா முன்வைத்ததாகக் கூறப்படும் கோரிக்கைகளைப் பாராட்டி மகிழ்கிறார்.

குளத்துக்குள் மூழ்கியிருப்பவன் 'மூச்சு'விடுவது மேலே தோன்றும் நீர்க்குமிழிகளால் அறியப்படுவதுபோல், செயலலிதா சார்பில் இப்போது தில்லியில் அமைச்சராகி யிருப்பவர்கள் வாய் வெடிப்பதிலிருந்தே அவர் பேரம் எத்தகையது என்பது எவர்க்கும் எளிதில் விளங்கும்.

'தமிழ்நாட்டில் செயலலிதா வழக்கில் சட்டம் தன் கடமையைச் செய்தால் தில்லி அரசியல் தன் பணியைச் செய்யும்' என்கிறார் ஒருவர்; 'தமிழ்நாடு விரைவில் தி.மு.க. ஆட்சியிலிருந்து விடுதலை பெறும்' என்கிறார் மற்றொருவர்; அவரே 'தி.மு.க. ஆட்சியைக் கலைக்க 356 தவிர வேறுவழிகளும் உள்ளன' என்கிறார். 'ஆறுமாதத்தில் தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் வரும்' என்கிறார் வெளியே இருக்கும் வேறொருவர். இவையெல்லாம் செயலலிதா தமிழ்நாட்டு நலங்கருதி முன்வைத்த கோரிக்கைகளின் வெளிப்பாடா? அல்லது அவர்தம் கமுக்கப் பேரத்தின் உள்ளீடா?

ஆகவே, செயலலிதா தில்லியில் பாரதிய மக்கள் கட்சி அரசமைக்க செயலலிதா ஆதரவு கொடுத்திருப்பதும் அமைச்சரவை யில் பங்கேற்றிருப்பதும் தம்மைக் குற்ற வழக்குகளிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் தி.மு.க. அரசைக் கலைக்கவுமே என்பது கல்லாச் சிறார்க் கும் தெள்ளிதின் விளங்குவதாயிருக்க, அதனை விடுத்து, நாட்டு நலனில் அக்கறை கொண்டவர்போல் செயலலிதா வெளிப்படுத்துபனவற்றை ஏற்று அவரைப் பாராட்டி மகிழ்கிற திரு. வீரமணி அவர்களுக்குப் பாரதிய மக்கள் கட்சியும் தூய்மையடைந்து விட்டதாகத் தெரிவதில் வியப்பில்லை!

தி.மு.க. கழக அரசுமீது குற்றங் குறைகள் இல்லாமல் இல்லை. அவை கண்டிக்கத்தக்கன; அவற்றை எதிர்த்து முறையாகப் போராடுதல் வேண்டும்; போராடுகிறோம்; தேவைப்பட்டால் தேர்தல்வழி மாற்றங் காணலாம் என்பது வேறு; தில்லி அதிகாரம் இங்குள்ள ஆட்சியைக் கலைப்பது வேறு!

இனி, தி.மு.க. அரசு வன்முறையை அடக்கி நாட்டில் அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் முனைந்து செயல்படுவது பாராட்டத்தக்கது. அதை வரவேற்கிறோம். ஆனால், ஒன்றை அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறோம். வன்முறையை யாரும் விரும்பி ஏற்பதில்லை. நன்முறையின்மீது நம்பிக்கை இழப்பதாலேயே வன்முறை தலைதூக்குகிறது. வன்முறைக்கு வித்திட்டவர்கள்—அம் மனப்பான்மை வளர அடிப்படைக் காரணமானவர்கள் யார் என்பதைக் கண்டறியத் தவிர்ப்பதோ கண்டுங் காணாமல் விடுவதோ நயன்மையாகாது. வன்முறையாளர்களைவிட அதற்குக் காரணமானவர்களே மிகவும் கொடியவர்கள்!

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (திருக்குறள் 948)

அறுபருவத் திருக்கூத்து

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

4. பின்பனிக் காலம்

காலம் : கும்பம் - மீனம் (மாசி, பங்குனி)

பாட்டுச் சுருக்கம்:

ஆற்றலாளர்தம் சிறந்த திறமையைப் பாராட்டி வழங்கும் பொருட் கொடையைப் போல முன்பனிக் காலத்தில் வந்த சுறவத் திங்கள் அளித்த நல்வரிசையைப் பெற்ற பின், ஊசியாற் குத்துவதுபோல் தாக்குகின்ற பின்பனிக்காலம் ஓசையெழுப்புங் காற்றினை வீசியவாறு வந்துற்றது!

வெண்ணிறம் வாய்ந்த பனி முன்னிரவில் குறைந்து பின்னிரவில் பெருகப் பெய்தலின் உயிரும் உடலும் போல் ஆணும் பெண்ணுமாய் ஒன்றி வாழும் அன்றிற் பறவைகள் தமக்குள் ஒன்றில் ஒன்று அணைந்து இரவெல்லாம் ஒலியெழுப்புகின்றன.

குன்றவாணர்கள் கொல்வது போன்று குளிரால் தாக்கும் பனிக்கு அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

புறாக்கள் தம் இணையொடு கூடி மெல்லிய உடல் சோர்ந்திருக்கின்றன. வானத்தினின்று பெய்யும் வெண்மையான பனியில் நனைந்து கானங்கோழிகள் கொக்கரிக்கின்றன. ஆண்பறவை யொடு கூடி வேட்கை தீர்த்த நல்ல பெட்டைக் கோழிகள் தம் இணையின் பக்கத்தே வந்து உறக்கங்கொள்கின்றன. பனியில் நனைந்த சிறிய தினையின் கதிர்களைக் கதுவி உண்ணுதலால் கிளிகளின் கடைவாயினின்றும் நீர்த்துளிகள் பிழிபடுகின்றன. அவற்றின் மெல்லிய கால்கள் பனித்துளிகளால் நனைகின்றன.

பெரிய மலையடுக்குகளில் பனிமுகில் போர்த்திருத்தலால் காம வேட்கை யற்ற பெண்பறவையைச் சிறு கனைப்பொலி எழுப்பித் தேடித் திரியுஞ் சேவல், செஞ்ஞாயிற்றின் ஒளியில் அதனைத் தெரியக் காணுகின்றது. தீப்பந்தங் கொண்டு அழிக்கப்பட்ட தேன் கூட்டினின்றுந் தேன் ஒழுகுவது போலத் தூக்கணங் குருவிக்

கூட்டினின்றும் அதிற்றோய்ந்த பனிநீர் ஒழுகுகின்றது. ஒலிக்கின்ற ஓலை மட்டைகளைக் கொண்ட உயர்ந்த பனைமரத்தில் குலையாக அடர்ந்திருக்குங் காய்கள் முதிர்கின்றன. செழிப்புமிக்க அவரைக் கொடிகளில் வளைந்த காய்கள் நிறைந்திருக்கின்றன. ஈச்ச மரங்களில் சொல்லுதற்கரிய இனிய சுவையுடைய பழங்களைக் கொண்ட பெரிய குலைகள் காட்சியளிக்கின்றன. கோங்கு மரங்கள் பூக்களை அணிகின்றன. குளிர்ந்த தீப்பற்றியது போன்று பூக்கள் விளங்கும் இலவமரங்கள் புதர்களால் சூழப்பெற்றிருக்கின்றன.

நீரில் அருகருகே படிந்திருக்கும் ஆமையின் முதுகு போல் தாமரை இலைகளின்மீது குளிர்ந்த பனித்துளிகள் திரண்டு நிற்கின்றன.

வயற்காடுகளிளெல்லாம் வான்மீன்கள் பூத்தது போல் பருத்தியின் முதிர்ந்த மொட்டுகள் மலர்கின்றன. நெல்லிக் கிளைகளின் மெல்லிய இலையடுக்குகள்மீது சிறிய பழங்கள் நிறைந்து மரத்தடியில் உதிர்கின்றன.

பொன்போலும் அழகிய உடலையுடைய செல்வ மகளிர் செம்மையான பட்டாடையின் வெப்பத்தில் ஒடுங்கியவாறு சோர்வொடு காட்சியளிக்கின்றனர். அவர்தம் விழியின் மேலவான இமைகளும் பனியால் ஈரமாகின்றன; விரல் முனையான உகிர் களும் குளிர்ச்சி யடைகின்றன; நீண்ட இளமை பொருந்திய மூங்கில் போலும் திரண்ட தோள்களும் பனியால் குளிர்விக்கப்படுகின்றன. கொழுமையான ஆவின்பாலைச் சுண்டக் காய்ச்சி, சிறந்த குங்குமப் பூவையுங் கலந்து உடலினுள்ளே குளிரடங்குவதோடு வெளியே வெயர்க்கும்படியும் கண்ணின் இடுக்கம் நீங்கச் சூடாக விரைந்து பருகுகின்றனர்; வெண்ணிலவு ஒளிரும் வெளிமுற்றத்தினின்றும் வீசும் பனிக்காற்றுக்கு அஞ்சி அழகிய திரைச்சீலைகளைக் கொண்ட பலகணிப் பகுதியை விடுத்து வெப்பம் பொருந்திய அறைகளில் இருக்கின்றனர்.

வலிந்த குளிர்காற்றால் தாக்குறும் ஏழைமை மகளிர் காயநறு குச்சிகளைக் கொண்டு தீமூட்டிப் பதமாக வேகவைத்த சுவையான வள்ளிக்கிழங்கொடு, வரகரிசிச் சோற்றையும் உண்கின்றனர். உண்ட அப்பாவையர் பனையோலை மட்டையாற் கட்டப்பட்ட படல் என்னுங் கதவை உயர்த்து நிறுத்தித் தம் குடிலின் வாயிலை அடைத்து, நனைந்து குளிரால் நடுங்கும் உடலை ஆடையாற் போர்த்திக் கொண்டு, கொடிய பனியால் நனைந்த தரையில் சணற்பையை விரித்து உறக்கத்தான் கண் மூடியவாறு படுத்திருக்கின்றனர்.

மயக்கங் கொள்ளுமாறு புளித்த கள்ளைக் குடித்திருக்கும், மீன் போலுங் கண்ணையுடையவரான காதல் வயப்பட்ட மகளிர்தம்

அழகிய உதடுகள் பனியால் வெடித்திருக்கின்றன; மூக்கின் நுனியுங் கூடக் குளிர்ந்திருக்கின்றது; குருத்துப் போன்ற இளமைப் பருவத்து மார்பகங்களும் தண்மையுறுகின்றன; பற்கள் நடுங்குகின்றன; அவர்தம் இளமைபொருந்திய கைகள் உடலை இறுக்கிக் கொள்கின்றன. பெரிதும் வருந்திய அவர்கள், விளங்குகின்ற தோளையுடைய ஆடவர்தம் அகன்ற கைகளின் அணைப்பில் தம் தளிர்போலும் உடலை ஒடுக்கிக்கொண்டு அடங்கிக் கிடப்பவராய்த் துயில்கொள்கின்றனர்.

வளைந்த வில்லையுடைய குறவர்கள் குன்றின் பக்கத்தே குப்பலாய் வளர்ந்து முற்றிய குளிர்ச்சி பொருந்திய தினை விளைச்சலைக் கொய்து சென்று வாய்ப்பான களத்தில் வைத்துக் கதிர்களை அடித்து அவற்றிற் பொதிந்திருந்த நென்மணிகளைத் திரட்டி அவற்றினின்றெடுத்த புத்தரிசியை உலையிலிட்டுச் சமைத்த சோற்றை யுண்டு, புளித்த கள்ளைக் குடித்தமையால் பலவாறு பேசி மகளிரொடு மகிழ்ந்திருக்கின்றனர்.

ஒலிக்கின்ற கடலையடுத்த பாக்கத்தின்கண் வாழும் ஓடத்தை யுடைய பரதவர்கள், வருத்துகின்ற பனிபெய்யும் விடியற் காலத்தே கட்டுமரங்களில் ஊர்ந்து சென்று, அழகிய கண்களைக் கொண்ட வலையை விரித்துக் கடலில்வீசி அயிரை மீன்களைப் பிடித்துக் கொண்டுவர, மகிழ்ச்சியுற்ற மகளிர் அவற்றையிட்டுப் புளிப்புச் சுவைமிக்க குழம்பு வைக்கின்றனர்.

அழகிய பொய்கையில் குளிர்ந்திருக்கும் நீரைக் கண்டு அஞ்சி வெதுவெதுப்பான வெந்நீரிற் குளிக்கின்றனர். குப்பியுள் நெய் உறைந்திருத்தலால் அஃது இளகி நீர்க்குமாறு வெயிலிற் சூடேற்றித் தம் நீண்ட கூந்தலுக்குத் தடவி வாரி, மலருகின்ற மல்லிகை மொட்டுக ளால் மாலை தொடுத்துத் தம் மெல்லிய அடியை நோக்கித் தாழ்ந்து வீழும் அடர்ந்த கூந்தலின்கண் சூடிக்கொள்கின்றனர்.

கேழ்வரகின் சிறிய அரிசியாலான கூழை உண்டு புன்முறுவல் பூக்கும் கூரிய பற்களையும் சிவந்த உதடுகளையும் மதியைப் போன்ற முகத்தையும் உடைய மகளிர் செல்லும் வழியில் அவரை விரும்பிய ஆண்பாலார் உலாவுகின்றனர்.

உப்பங்கழிகளில் விளைக்கப்பெற்ற உப்பு வருகின்றது.

கடும்பனியில் நீர்நிலைகளிலும் அவற்றைச் சார்ந்த புதர்களிலும் குளிர்ந்த பனி குறையுமாறு மீனத் திங்களில் வெம்மைமிகு வெயில் தொடங்கலாயிற்று. காலைப் பொழுது குளிர்ந்திருக்கின்றது; நண்பகல் வெயர்க்கும் வெப்பமுடையதாகின்றது; மாலையில் அவ்

வெப்பம் தணிகின்றது. மணல் சிறு துகள்களாகின்றது. வானத்தே முகில் முற்பகலில் திரிகின்றது; நண்பகலில் மறைந்துவிடுகின்றது; பிற்பகலில் திரள்கின்றது.

இனிய இளவேனிற் காலத்தை ஈனுந் தாயான பின்பனிக்காலம் பனியொடு பொருந்தி வந்தது; தன் வரவைப் பனியால் வெளிப்படுத்தி எங்கும் பரவியது.

இளம்பருவ மகளிர் மனம்வருந்தித் துன்புறவும், சோலையகத்துப் பறவையினங்கள் சோர்வுற்று ஒலியெழுப்பவும் வானத்தினின்றும் பின்னிராக் காலத்தே பனிபெய்யும் காலம் வந்துற்றது. பேருலகத்து உயிர்கட்கெல்லாம் காம வேட்கையை மிகுவிக்கவும், கார்முகில் பொழியும் மழையை எதிர்நோக்கி வாழும் பயிரினங்கட்கு இனிய விளைச்சலைக் கொடுத்து உயிர் வாழ்க்கைக்கு உதவவும் கோங்கு மரத்தின் மொட்டுகளிலும், இலவின் தீப்போலும் செந்நிறப் போதுகளிலும் பனித்துளி துயில்கொள்கின்ற பின்பனிக் காலம் தோன்றி வளர்கின்றது. அவ்வாறு வெண்மையான பனி பின்னிரவில் பெய்யுங் காலம் தோன்றி வளர்ந்து செல்லுதலால் பெருமை பொருந்திய இளவேனிற் காலம் வெளிப்பட்டு விளங்கும்!

இன்னிள வேனிற் கன்னை பின்பனி

நற்றிறம் வியந்து நல்குங் கொடையென
உற்ற சுறவத் தலையளி பெற்றபின்

ஊசித் துயர்தரும் உலவை வளியினை
வீசிக் கும்பம் மருவிட வெண்பனி

முன்னிராக் குறைந்து, முழுமீன் பூத்த
பின்னிராப் பெருகப் பெய்பனிக் கொடுங்கி

ஒன்றிலொன் றொதுங்கி உயிருட லொன்றிய
அன்றிற் புள்ளினம் இராமுழு தார்ப்ப,

குறவர் நடுங்கிக் கொல்பனிக் கஞ்ச,
புறவின மருவிப் பூவுட லயர,

வானங் கழன்ற வெண்பனி நனைந்து
கானங் கோழிகள் கனைகுரல் முரலிச்

சேவற் புள்ளொடு நறும்பெடை சிவணி,
ஆவல் தணித்தத னயல்வந் துறங்க,

மணித்தினை நனைகதிர் மாந்துகிளிக் கடைவாய்ப்
புனற்றுளி பிழிபடப், பூங்கால் நனைவுற,

மாமலை யடுக்கத்து மஞ்சு மேயலால்
காமறு பெடையைக் காணற் கலைவுறும்

சேவற் கோழி சிறுகனைப் பொலித்து
மேவு செங்கதிர் ஒளிப்படக் கண்ணுறத்

தீக்கொண் டழித்த தேன்கூ டழிதலாய்த்
தூக்கணங் கூட்டிடைத் தோய்பனி யொழுக,

முழங்கிலை நெடும்பனை மொய்காய் முதிர
கொழுங்கொடி அவரைக் கொடுங்காய் மலிய,

வளங்கெழு பயற்று வகையின மல்க,
விளம்பறு தீஞ்சுவைப் பேரீந் திலங்கக்

கோங்குபூத் தொடுக்க, குளிர்எரி பற்றிய
பூங்கோட் டிலவம் புதரணைந் திருப்ப,

ஆமை முதுகென அயலயல் படிந்த
தாமரை இலைமிசைத் தண்பனி திரள

வானத் துடுக்கள் வயல்தொறும் பூத்தபோல்
கானப் பருத்திக் கனிமுகை யவிழ,

மெல்லிலை யடுக்கின் மேலுறுங் கோட்டிடை
நெல்லிச் சிறுகனி நிறைந்தடி யுதிரச்

செம்பட் டாடைச் சூட்டுள் ளொடுங்கி
அம்பொன் மேனியர் அயர்வொடு விளங்க,

விழியிமை நனைப்ப, விரலுகிர் பனிப்பக்
கழியிள மூங்கிற் கணைதோள் குளிர்ப்ப,

வளங்கெழு ஆப்பயன் வற்றக் காய்ச்சிக்
குளிர்கெடத் தேர்ந்த குங்குமம் அளவி,

உட்குளி ரடங்க, உடல் வெயர்ப் பெய்தக்
கட்குழி யயரக் கதுமென அருந்தி

வெண்ணிலா முற்றத்து வீசுபனிக் கஞ்சி
வண்ணச் சீரைப் பல்கணி விடுத்துச்

செல்வ மடந்தையர் சூட்டக மிருப்ப,
வல்வளி தாக்குறு வறுமை மாதரார்

சுள்ளி எரித்துச் சுவைபட அவித்த
வள்ளிக் கிழங்கொடு வரகூண் உண்டு,

பனைபடு ஓலைப் படலெடுத் துயர்த்தி
நனைகுளிர் ஆடை நடுக்குடல் போர்த்திக்

கொடுபனி நனைதரை கோணி விரித்துப்
படுகண் மூடிய பாவையர் கிடப்ப,

மயலுற நுரைபடு மதுவுண் டிருக்குங்
கயலுறு தடங்கண் காதல் மடந்தையர்,

முருகிதழ் வெடிப்ப, மூக்குநுனி பனிப்பக்
குருகிளம் பருவக் கொம்மை குளிர,

எயிறு நடுக்குற, இளங்கை மேலுற,
உயவுநோ வருந்தி ஒண்டோள் ஆடவர்

தடங்கை யணைப்பிற் றளிருட லொடுக்கி
அடங்கிக் கிடக்குநர் அங்கண் அயரக்

குன்றின் மருங்கிற் கொடுவிற் குறவர்
ஒன்றுமுதிர் தண்தினை உறுகளத் தேற்றிப்

பொதிகதி ரடித்துப் பொன்மணி கூட்டிப்
புதிய துலையேற்றிப் பொங்குசோ றயின்று

நுரைத்த தேறல் நுங்கிப் பலவா
றுரைத்து மகளிரோ டுவந்தினி திருப்ப,

ஒலிகடற் பாக்கத் தோடப் பரதவர்
நலிபனி வைகறை நாண்மரத் திவர்ந்தே

அங்கண் வலைவிரித் தயிரை கொணரப்
பொங்குள மடவார் புளிங்கறி கூட்டிப்

பொய்கை பனித்த பூம்புனல் நடுங்கி
வெய்ய நன்னீர் வெதுமெனக் குளித்து,

நெய்யுண் குப்பி நீர்த்திடல் வேண்டி
வெயின்கூ டேற்றி வீழ்குழல் நீவி,

மல்லிகை அவிழ்முகை மாலை தொடுத்து
மெல்லடி வீழும் மொய்குழல் மடுத்துக்

குறுமணிக் கேப்பைக் குழைவை உண்டு,
முறுவல் முகிழ்க்கும் முள்ளெயிறு துவரிதழ்

நிலாமுகப் பெண்டிர் நெறிவீழ்ந் தாடவர்
உலாவர, கழிமுகத் துப்புவிளை வருக,

சிறுகுடிற் கூரை சீறுபனி நனைப்புண்
டுறுகதிர் வெப்பத் துலர்மென்புகையெழத்

தங்குநீர்ச் சுனைபுதர் தண்பனி யொடுங்கித்
திங்கள் மீனத்துத் தெறுவெயிற் றொடங்கக்

காலை குளிர்ந்து, கடும்பகல் வெயர்த்து
மாலை தணிவுற, மணல்நுண் பொடிப்ப,

முற்பகல் அலைந்து, நற்பகல் மறைந்து
பிற்பகல் முகிலினம் பிணைந்துவான் திரிதர,

இன்னிள வேனிற் கன்னை பின்பனி
துன்னிநடந்ததால்! தூற்றிப் பரந்ததால்!

வாலைக் கன்னியர் வாடி யுழலவும்,
சோலைப் புள்ளினம் சோர்வுற் றிசைக்கவும்,

வானகத் தின்று வந்த பின்பனி
மாநில உயிர்க்கெலாம் மயல்மே லேற்றவும்,

மாமழை நோக்கி வாழும் பயிர்க்கோர்
ஏம விளைவீந் தின்னுயிர்க் குதவவும்,

கோங்கின் முகையினும், கொடுந்தீ இலவிலும்,
தூங்கு பின்பனி, தோன்றி வளருமால்!

தூங்கு வெண்பனி தோன்றி வளரவே
வீங்கிள வேனில் வெளிகொளத் தோன்றுமால்!

தென்மொழி நன்கொடை வரவுகள்

(1-12-97 முதல் 31-3-98 முடிய)

1.	கவின்பணிஞன்	புதுக்கோட்டை	10.00
2.	கழராம்பன்	திண்டுக்கல்	50.00
3.	பேரா. அரசேந்திரன்	சிட்டிலபாக்கம்	2.00
4.	கவின்பணிஞன்	புதுக்கோட்டை	10.00
5.	செந்தாழை ஆறிறைவன்	தூசான்	3,000.00
6.	பதுமநாபன்	மதுரவாயல்	25.00
7.	குமர. தன்னொளியன்	வேலூர்	14.00
8.	தமிழ்மணி	புதுச்சேரி	60.00
9.	இரா. பதுமநாபன்	மதுரவாயல்	25.00



நீர் நிலவும் நிலவு

நிலவைப்பற்றிக் கடந்த அரைநூற்றாண்டாகவே பல ஆய்வுகள் நடந்துள்ளன. அண்மையில் இரண்டு மாதங்களுக்கு முன் ஏவிய நிலவு வழிகாட்டி (Lunar Prospector) என்ற ஆய்வுக் கலத்தின்வழி வந்த முகாமையான செய்திகளில் ஒன்று நிலவில் நீர் பனிப்படிவு வடிவத்தில் உள்ளது என்பதாகும்.

நிலவு என்பது இந்நிலவுலகத்தைச் சுற்றிவரும் ஒரே இயற்கைத் துணைக்கோளாகும். நம்மிலிருந்து 3,84,000 அயிர மாத்திரித் தொலைவில் சற்று நீள்வட்டத்தில் உலகத்தைச் சுற்றிவருகிறது. இது சுற்றிவரும் விரைவு மிகவும் அதிகமாகும். மணிக்கு 3700 அயிரமாத்திரி விரைவில் சுற்றி வரும் இந்த நிலவு, உலகத்தைச் சுற்றி வலம்வர 27 நாட்கள் எடுத்துக் கொள்கிறது.

இது கதிரவனைச் சுற்றி வரவில்லையாயினும், இதன் அளவையும் அமைப்பையும் பொறுத்து, இதை ஒரு கோளாகவே அறிவியலார் மதிக்கின்றனர்.

1959-ஆம் ஆண்டு முதன்முதலில் விண்கலவழி நிலவின் ஆய்வைச் சோவியத்து நாடு தொடங்கியது. 1969 சூலை 20ஆம் நாள் மாந்தன் நிலவின் பாறையும் தூசியும் படர்ந்த பகுதியில் கால் வைத்தான். அவன் திரும்பும் போது 400அயிர எடையுள்ள புறவின் பொருளாக (Extra terristial body) முதன் முதலில் உலகிற்குக் கொணர்ந்தான்.

சோவியத்து நாடும் அமெரிக்காவும் போட்டிப் போட்டுக் கொண்டு முன்னேற்றமான பல புதிய செய்திகளைக் கொடுத்துவந்தன.

இருப்பினும் விண்கலங்கள் கொடுத்த படங்களிலும் செய்திகளிலும் கொணர்ந்த மண் ஆய்விலும் விடையற்ற வினாக்கள் பல எஞ்சின. அவை இன்னும் விடைகாணப்படாமலே உள்ளன.

மிக அண்மையில் 1994 அளவில் சிறுசிறு ஆய்வுக்கலங்கள் நிலவில் நீர்ப் பனிப்புகள் இருப்பதன் அடிப்படையை மாற்றாய்வுகள் உணர்த்தின.

மா. பூங்குன்றன்

நிலவின் தென் முனையில் பல கற்கள் பரப்பில் நிலையான நிழல் படிந்த குழிவைப் படங்கள் காட்டின.

'அப்போலோ' கொணர்ந்த பாறைமண் ஆய்வில், உலகில் உள்ளது போன்றே எரிமலைப் பொருள்கள் நிறைந்திருந்தன. மேலும் மண் ஆய்வுகள் நிலவில் தோன்றியதன் நிலையை ஆயக்கூடிய கூறுகளுடன் ஞாயிற்று மண்டிலம் உருவானதற்குரிய பல சான்றுகளையும் தந்தன. ஏறக்குறைய நானூறு கோடி ஆண்டுகளுக்குமுன் இவ்வுலக உருண்டை செவ்வாய்க் கோளத்தைவிடப் பெரியதொரு கோளத்தில் மோதியதில் பிதுங்கிய குழம்பு உருண்டைதான் நிலவு என மோதல் கொள்கை வழி ஆய முடிகிறது.

இப்போது இம்மோதல் கொள்கை அனைத்து அறிவியலார்களாலும் ஏற்கப்பட்டுள்ளது. வேறுசில கொள்கைகளையும்விட இதுதான் இப்போது நிலவின் தோற்றத்திற்குப் பொருந்தியுள்ளது.

நிலவின் மேற்பரப்பில் 60 அயிரமாத்திரி ஆழத்திற்கு தூசிப் படலம் படர்ந்துள்ளது. பல வீழ்கற்களில் வழி உருகிய மண் பாறைகள், தாக்கப் பள்ளங்கள் நிலவின் பரப்பில் நிறைந்துள்ளன.

உலக உருண்டைபோல் குறிப்பிடத்தக்க காந்த வயல்களும் வளிமண்டலமும் நிலவில் இல்லாததால் ஞாயிற்றுப் புயல்கள் தோன்றி அடிக்கடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தொடர்ச்சியான வேதியல் மூலகங்கள் நுழைவையையும் ஞாயிறு நிலவில் ஏற்படுத்துகிறது. எனவே ஞாயிறு பற்றிய ஆய்வையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

1994-ஆம் ஆண்டு ஆய்வுகளில் தென் முனையில் உள்ள நிழல் குழிவுகளில் குளிர்ச்சி அதிகம் இருப்பதால் நீர்ப் பனிப்புகள் இருக்க வாய்ப்புண்டு என்ற ஏடல்களின்பின் 1997 இறுதியில் 'நாசா' நிறுவனம் அனுப்பிய நிலவு வழிகாட்டிக் கலம் நிலவின் முனைகளையும், பரப்பையும் ஆராயத்தொடங்கியது.

நிலவின் பரப்பிலிருந்து நூறு அயிர மாத்திரி உயரத்தில் சுற்றிவரும் இந்தக் கோள் ஐந்து கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது. காந்தப் புலமானி (Magnetometer), நடுமின் கதிர்மானி, உகரக் கதிர்மானி, எதிர்மின் எதிரொலிப்பு மானி, அகரத் துகள் நிரல்மானி ஆகிய ஐந்துகருவிகளுடன் வலம் வருகிறது. இக்கருவிகள் நிலவின் வளிமண்டிலம், நிலவு முகடு, மாழைகள், நீர்ப்பனி, சில வளிமங்கள், ஈர்ப்பாற்றல் காந்தப்புலம் இவற்றைப் பற்றிய வரைபடங்களையும் இருப்புகளையும் ஆய்கின்றன. இதில் நடுமின் நிரல்மானி வழிப் பனிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. அரை மாத்திரி ஆழம்வரை பனிப்படிவு நிறைந்து காணப்படுவதாக இருந்தது. அதன் பின் வந்த ஆய்வின்படி ஒரு கோடி முதல் முப்பது

கோடி கல்லெடை அளவில் நீர்ப்பனி நிறைந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டது. தென் முனையில் காணப்பட்டதைவிட வடமுனையில் உள்ள குழியில் பல வியப்புக்களும் உள்ளன. இவ்வாய்வுகளில் நீர்ப்பனி சிறிய படிகவடிவில் நிலவுப் பாறைகளோடு பாறைகளாகக் கலந்து உறைந்துள்ளது. இக்கலவையிலுள்ள பாறை, வடமுனையில் *500* முதல் *50000* சதுர அயிர மாத்திரி வரை என நடுமின் நிரல் மானி (Neutron Spectrometer) முடிவு செய்தது.

கதுவி (Radar) அடிப்படையில் அமைந்த நுட்பக்கருவிகளின் வழி *10*கோடி முதல் *100* இலக்கம் கோடிக் கல்லெடை நீர்ப்பனி *15,500* சதுர அயிரமாத்திரி பரப்பில் நிறைந்துள்ளதாகக் கணக்கிடப்படுகிறது.

இதையடுத்து நிலவின் மேற்பரப்பின் பத்து அயிரமாத்திரி மேல் மிகவும் தாழ்ந்த அளவில் சுழல்வுகொண்ட விண்வெளிக்கலம் ஒன்று விடப்படக்கூடும்.

இந்த நீர் ஆய்வுகள் எல்லாம் எதிர்காலத்தில் மாந்தனின் குடியேற்றத்திற்கு வழி வகுக்கும் வகையில் அமையும். இப்போதிருக்கும் நீர்வளம் ஈராயிரம் மக்கள் குமுகாயம் பெருக்கமற்று நிலவில் வாழ்வதற்கு வழிகோலும் எனக் கணக்கிடுகின்றனர்.

மேலும் நிலவு ஒரு கன்னெய்வளம் நிறைந்த ஒன்று. நீர்வளத்தில் ஒரு பகுதி எரிபொருள் வளத்திற்கும் பிரிக்கப்படலாம். அவ்வாறு பிரிக்கப்படுமானால் நிலவு ஒரு புற மண்டில நிலையமாகவும் ஒரு தளமாகவும் விண்வெளி ஆய்விற்குப் பயன்படும். *

ஆடவைத் (சூன்) திங்களில் வெளிவர இருக்கிறது!

பாவலரேறு ஐயா அவர்களின்

மூன்றாம் ஆண்டு நினைவு - 'தென்மொழி'ச் சிறப்பு மலர்

- அரசியல் தலைவர்கள், அறிஞர்பெருமக்கள், பாவலர்கள், கலை வல்லுநர்கள் முதலானோர்தம், கட்டுரைகள், பாடல்கள், கைவண்ணங்கள் ஆகியவற்றைத் தாங்கி வெளிவரவுள்ளது.
- பாவலரேறு ஐயா அவர்களின் வாழ்க்கைத் தொடர்பான அரிய நிகழ்ச்சிக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன!
- தேவைக்குத் தொடர்பு கொள்க!

'தென்மொழி'
சென்னை - 600 005.

இன்னே எழுக செயல்முனைப் புற்றே!

[வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா]

தரவு

நிறைபுலத்துப் பெருவளஞ்சேர் நெடியபுகழ் நிலைகொண்ட
மறைமலையின் மனத்தரங்கில் மலர்ந்தெழுந்த ஒளிப்பிழம்பு
மொழிஞாயி றெனவுலகந் தொழுதேத்தும் பாவாணர்
ஒழிவின்றிப் பலதுறையும் விழிவைத்துப் பெரிதாய்ந்தே
உலகுமுதன் மொழியீதென் றுறுதியுற நிறுவியசீர்
இலகுவள மிகுதமிழுக் கியல்புரிமை யுடையோய் கேள்!

தாழிசை

நீணிலத்தின் உடன்றோன்றி நிலைசிறந்த குடிமரபின்
மாணுயர்ந்த ஒருமுவர் வழிவந்தோய் நிலவரையில்
பெரியதமிழ் நலமறியார் அறிவாரைப் பேணுகிலார்
அரியணைக்குக் குறிவைப்பார் அவர்க்கேவல் செய்தனையே!

தென்கடல் நெடும்பரப்புத் திகழ்ந்தபெருங் குமரியினைத்
தன்வயிற் றுளதாக்கிக் கொண்டதன்றி நின்மடியால்
வழிமொழிகள் வலக்காரம் வரம்பிகந்து மிகநீளக்
கொழிதமிழ் வழங்குநிலம் மேன்மேலுங் குறுகியதே!

நீள்தமிழுக் கயலவர்கள் நின்னாட்டிற் காலூன்றி
ஆள்கின்ற நிலையும்பெற் றார்க்கின்றார் நின்னவரோ
பலநாடுஞ் சென்றவற்றைப் பசுமையுறச் செய்தாலுஞ்
சிலவேனும் உரிமையின்றிச் சீரழியும் நிலையென்னே!

அராகம்

மாட்சியின் உயர்தமிழ் வழிபடு மொழியிலை எனமிக இழிவுசெய் மதம்!
ஆட்சியின் அலுவலில் தமிழிடம் பெறுவதில் தடையுறும் அரசியல் நெறி!
காட்சியின் இனியநல் மழலையர் முதலனை வரும்பயில் வதுபிற மொழி!
மீட்சியும் தமிழ்க்கினி யுளதுகொல் எனமிக உளைவது பெரியவர் மனம்!

நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம்

புறம்போக்கு மொழிச்சொற்கள் இடையிடையே புக்கதனால்
திறம்பட்ட செந்தமிழின் சீர்குலைவை யறிகிலையால்!

துறைதொறுந் தமிழ்வளம் புதுக்குதற் கிடையூறாய்த்
திறைகொள்வார் தங்கொள்கை செயற்படுதல் உணர்கிலையால்!

நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்

தாய்மொழியிற் கையொப்பம் இடுவதில்லை தமிழன் கை!
தாய்மொழியைப் பலுக்குதற்குப் புரள்வதில்லை தமிழன் நா!
தமிழிசை கேட்கிலவால் தமிழன்றன் செவியிணையே!
தமிழ்வரியைக் காண்கிலவால் தமிழன்றன் கண்ணிணையே!

(இறைக்குருவனார்)

முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்

கலப்படத்தால் திரிந்தது மொழி!
கயவர்களால் இழிந்தது கலை!
மறைகளினால் மறைந்தது மதி!
மனுவினரால் பிறழ்ந்தது முறை!
சடங்குகளால் புதைந்தது மதம்!
சாதிகளாய்ச் சிதைந்தது குடி!
வீறாப்பாய் இழிந்தது மறம்!
வெறுந்தரகால் ஒழிந்தது பொருள்!

இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்

வரலாற்றுத் திரிப்பொருபால்!
வழிபாட்டுக் கெடுப்பொருபால்!
அரசியலில் புரட்டொருபால்!
அலுவலர்செய் அலைப்பொருபால்!
கட்சிகளின் பிணக்கொருபால்!
கல்வியகப் பறிப்பொருபால்!
திரைப்படத்துத் தீங்கொருபால்!
உரைப்பாட்டுக் கரைப்பொருபால்!
சாதிகளின் தழைப்பொருபால்!
தாளிகைகள் கதைப்பொருபால்!
காட்சியொலி அழிம்பொருபால்
ஆட்டத்தின் அலைப்பொருபால்!
பணியில்லாப் பிணியொருபால்!
பரிசுச்சீட் டீர்ப்பொருபால்!
நடிப்பவரைச் சுவைப்பொருபால்!
நாடே குஞ் செலவொருபால்!

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

மொழியும் மொழிகொள் மக்களும் நிலனும்
இழிவுறக் கிடந்த பழிபடு நிலைமை
போய்மடிந் தொழியத் தாய்மொழி போற்றி
ஆய்வின் அறிவின் துறைபல கண்டு
தன்னுரிமை வாழ்க்கை நலம்பெற
இன்னே எழுக செயல்முனைப் புற்றே!

(சென்னையில், தி.பி. 2029 மீனம் 7 அன்று (21.3.98) நடைபெற்ற மொழிஞாயிறு பாவாணர் விழாப் பாவரங்கில் தலைமையேற்றுப் பாடியது.)

பைந்தமிழுக்கு இரண்டகம் செய்தவர் பத்தவச்சலம் மட்டும்தானா?

—முனைவர் அரு. கோபாலன்—

தமிழக முன்னாள் முதலமைச்சர் பத்தவச்சலம் மட்டுமே இந்திக்கு ஏந்து செய்து, ஆங்கில வல்லாண்மைக்கு இடங்கொடுத்துப் பைந்தமிழுக்கு இரண்டகம் செய்தவர் என்பது போன்ற ஒரு தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது. உண்மையில் இந்த இரண்டகச் செயலில் தலைவர்கள் பலருக்கும் பங்கிருக்கிறது.

தமிழ் வேண்டும் என்ற கொள்கையும் சரி, குரலும் சரி; வேறொன்றைக் கூடாது என்று எதிர்ப்பதற்காகவும், அதைக் கொண்டு தம்மை வளர்த்துக் கொள்வதற்காகவும் ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது—வருகிறது: அவ்வாறு அல்லாமல் · உள்ளபடியே தமிழுக்கு ஏற்றம் தரும் நோக்கில் செய்யப்படவில்லை.

மெய்யாகவே எங்கும் எதிலும் தமிழ் வேண்டும் என்று நம்பி, விரும்பித் தமிழ் ஆக்க முயற்சிகள் நடைபெற்றிருக்குமானால், எப்போதோ தமிழ் ஆட்சிமொழியாக — பயிற்சிமொழியாக ஆகிவிட்டிருக்கும்.

போலித்தனம்!

அப்படியல்லாமல் தமிழ்வேண்டும் என்ற முழக்கம் பலராலும் போலியாக ஒலிக்கப்படுவதாலேயே இன்றைய தமிழ் மாநிலம் அமைந்து நாற்பத்திரண்டு ஆண்டுகள் கடந்த பின்பும், தமிழ் ஆட்சி மொழி—பயிற்சிமொழிச் சட்டங்கள் நிறைவேறி ஏறத்தாழ அதே அளவுக் காலம் கழிந்தபிறகும் இன்னும் போராட்டத்திற்குரிய கோரிக்கையாகவே அது நின்றுகொண்டிருக்கிறது.

எடுத்துக்காட்டாக, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ாரதிய சனதாவோடு கூட்டணி சேர்ந்து நின்று, நாற்பது தொகுதி ளில் முப்பதில் வென்ற செயலலிதா, தம்மீது போடப்பட்ட ழக்குகளைக் கைவிடவேண்டும்; தி.மு.க. அரசைக் கலைக்க வண்டும் என்பதற்கு ஏந்தாகத் தில்லியில் சுப்பிரமணியம் சாமியைப் பாருளியல் அமைச்சராகவும், வாழப்பாடி இராமமூர்த்தியைச் ட்ட அமைச்சராகவும் உடனடியாக ஆக்கவேண்டும் என்று ட்டுப்பாடு (நிபந்தனை) வகுத்து அது பாரதிய சனதாவின் மலிடத்தால் ஏற்றுக் கொள்ளப்படாததால், வாச்சுபேய் அரசு றுவப்படுவதற்கான தமது ஆதரவு மடலை அளிப்பதற்கே காலந் ாழ்த்தினார்.

உள்ளும் புறமும்!

ஆனால், வெளியில் "தமிழை நடுவணரசில் ஆட்சிமொழியாக்க வேண்டும். காவிரி நீர்ச் சிக்கலில் நடுவர் மன்ற ஆணையை நடைமுறைப்படுத்தவேண்டும். பெரியாறு அணை உயரத்தை அதிகரிக்க வேண்டும்'' என்பன போன்ற தமிழக நலன்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்றுதான் தாம் கேட்டதாகவும், அதற்கு பா.ச.க. தலைமை உடனடியாக ஒப்புக்கொள்ளாததாலேயே ஆதரவு மடலை அளிக்கவில்லை என்றும், தமிழுக்காகத் தமக்கு தில்லியில் வந்த வாய்ப்பைக்கூட உதறித் தள்ளியதைப்போல நாடகமாடினார்.

அவர் சொன்ன மூன்று கோரிக்கைகளும் வரவேற்புக்குரியவை தாம் என்றாலும், அவற்றை அவர் எழுப்பியது, அவற்றுக்குத் தொடர்பே இல்லாத சொந்த விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கன்றோ!

திரையிட்ட உள்நோக்கம்!

தி.மு.க. கூட நடுவணரசில் தமிழையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று கோருவது, தமிழகத்தில் தன் ஆட்சியில் தமிழ் புறக்கணிக்கப்படுவதை மறைப்பதற்கன்றோ!

இப்படித் தமிழ்பற்றிய கோரிக்கைகள் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப இருப்பதாலன்றோ அதே செயலலிதா ஆட்சியின்போது தமிழுக்காகத் தாவிக் குதித்த பேராசிரியப் பெருமக்கள் — தமிழ்த்தறுகண் மறவர்கள் பலர் கலைஞர் முதலமைச்சரானவுடன் "தமிழே அரியணை ஏறிவிட்டதே இனி என்ன தமிழுக்காகப் போராட்டம்?'' என்று முகங்களைத் திருப்பிக் கொண்டார்கள். அதையும் பார்க்கத்தானே செய்கிறோம்!

ஏன்? கலைஞரேகூட ஆட்சியில் இல்லாதபோது "ஒருமுறை ஈழத் தமிழர்களுக்காக அரசைப் பறிகொடுத்தோம். தமிழுக்காகவும் ஒரு முறை ஆட்சியை இழந்திருக்கலாம்'' என்று, ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தமிழைக் கைவிட்ட தமது நிலையைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவேந்தல் கூட்டத்தில் சொன்னார்தானே!

இந்தியமும் திராவிடமும்!

அவர்தாமே இன்று தமிழக ஆட்சியில் இருக்கிறார்! அதுவும் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளே இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு வலிமையுள்ளவராகத்தாமே இருக்கிறார். ஆனால் தமிழுக்கென்று தனியாக அமைச்சர் ஒருவரை அமர்த்தியதோடு தம் கடமை முடிந்து போனது போலத்தானே நடந்துகொள்கிறார்! அவரை வைத்துக் கொண்டுதானே அவருடைய மருமகன்—

தில்லியின் முன்னாள் அமைச்சர் மாறன் தமிழ்க்குடிமகனையும் குறிப்பிட்டுப் பேசித் 'தமிழ் தமிழ் என்று ஆங்கிலத்தைக் கைவிட்டு விட்டால் காட்டுவிலங்காண்டிகளாகிவிடுவோம்' என்று சாடினார்!

கலைஞர் மட்டுமன்றி, இந்தியத் தேசியக் கட்சிகள், திராவிடக் கட்சிகளைச் சேர்ந்த பெரும்பான்மையான தலைவர்கள் தமிழைப் பொறுத்தவரை அன்றும் இன்றும் உண்மையானவர்களாக இல்லை என்பதே உண்மை.

தலைமாகாணத்தில்...

இந்திய விடுதலைக்கு முன்பே அன்றைய சென்னை(Madras Presidency)த் தலைமாகாணத்தில் 17 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த இன்றைய திராவிடக் கட்சிகளின் தாய் அமைப்பான நயன்மை (நீதி)க் கட்சி, அதன் ஆந்திரப் பகுதியில் தெலுங்கை வளர்த்த அளவுக்கு, தமிழகப் பகுதியில் தமிழை வளர்க்கவில்லை. தனது கட்சி அரங்குகளிலேகூட அண்ணா போன்றோர் தலையெடுக்கும்வரை தமிழைத் தலைகாட்டவிட்டதில்லை.

அதை எடுத்துக்காட்டித்தான்—இந்திய விடுதலை கிடைத்தால் தமிழ்நாட்டில் எங்கும் எதிலும் தமிழே கோலோச்சும் என்று சொல்லித்தான் — பேராயக் கட்சியினர் தம்மை இங்கே வளர்த்துக் கொண்டனர். ஆனால் விடுதலைக்குப்பின் அவினாசிலிங்கம் போன்ற ஒருசிலரைத் தவிர, மற்றவர்கள் இந்தியிடம் காட்டிய அளவுக்குக்கூடத் தமிழிடம் அக்கறை காட்டவில்லை.

வீச்சை மாற்றிய வீச்சு!

விடுதலைக்கு முன்பே — விடுதலை உறுதி என்று தெரிந்தவுடனேயே இடைக்கால அரசில் பதவிபெற்ற இராசாசி இங்கே இந்தியைப் புகுத்தினார். அதன் விளைவாக 1938-இல் முதல் இந்தியெதிர்ப்புப் போர் இங்கே வீறுகொண்டெழுந்ததும், தந்தை பெரியார் அதற்குத் தலைமை தாங்கியதும் அனைவரும் அறிந்ததே. 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற முழக்கம் அப்போது தோன்றியதும், அதுவே தமிழக விடுதலையைத் தேடித்தரும் வீச்சைத் தன்னுள் கொண்டிருந்ததும் வரலாற்று உண்மை.

ஆனால், அன்று ஒரே மாகாணமாக இருந்ததையிட்டு, சென்னையைத் தலைமையகமாகக் கொண்டிருந்த அரசியலில் பெரும்புள்ளிகளாக விளங்கிய தெலுங்கு – கன்னட – மலையாளத் தலைவர்கள் அந்த வீச்சைத் திசைதிருப்பி அதற்குத் திராவிட முக்காடு போர்த்தினார்கள். அதேவேளை 'விசால ஆந்திரா' என்றும், 'சமியுத்த கர்னாடகா' என்றும், 'ஐக்கிய கேரளா' என்றும் கோரிக்கை எழுப்பி, தமிழகத்திலிருந்து எவ்வளவு கொண்டு போக முடியுமோ அவ்வளவையும் கொண்டு போக வழிசமைத்துக் கொண்டார்கள்.

முடிபோயும் அடிபோகாத நிலை!

தமிழகத்தை மட்டும் தொடர்ந்து திராவிட (நான்கு மொழி மாநில)மாகச் செய்து, இந்தியெதிர்ப்புப் போர்வையில் ஆங்கிலமே இங்குத் தொடர்ந்தும் வல்லாண்மை செலுத்திட ஆவன செய்து கொண்டார்கள். தமிழை மேலே வரவிடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

ஆம்; ஆந்திர – கன்னட – கேரளப் பகுதிகள் போன பிறகும் உடனடியாக இதைத் தமிழகமாக்கவிடவில்லை. சென்னைத் தலைமாகாணம் (Madras Presidency) என்பதிலுள்ள 'தலை' (Presidency)தான் போனதே தவிர, மற்றது போகவில்லை. *1969*-இல் தான் 'தமிழ்நாடு' என்ற பெயரே அண்ணாவால் சூட்டப்பட்டது.

தமிழை நாடாத தமிழ்நாட்டு இரு முனைகள்!

தமிழகத்தின் தீயூழ்! இங்கே தமிழை முன்னிருத்தி, தமிழ்மண் காக்கக் குரல் கொடுத்த ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகம் இந்தியைப் புகுத்திய பேராயக் கட்சியின் பரப்புரை (பிரச்சார) அமைப்பாக வும், மொழி — இன விடுதலையை முன்னிறுத்தி வளர்ந்துவந்த திராவிடக் கட்சிகளின் எதிர்மேடையாகவும் இயங்கியதால் பெரும்பான்மைத் தமிழ்மக்களின் பேராதரவைப் பெறமுடியவில்லை.

விளைவு? ... தமிழக அரசியலே இந்தி வேண்டும்—வேண்டாம் என்ற இரு பிரிவுகளாகி, அதற்குத் துணைக்கருவி என்கிற அளவுக்குத் தமிழின் தகுதி தாழ்த்தப்பட்டது. இதன் எதிரொலியாக இந்தி வேண்டும் என்போர் ஆங்கிலத்திற்கு ஆதரவு தந்தாலும் தருவார்கள்; தமிழுக்குத் தரமாட்டார்கள். அதுபோல் இந்தி வேண்டாமென்போர் இந்தி புகுவதைக் கண்டுகொள்ளாமல் இருந்தாலும் இருப்பார்கள்; தமிழுக்கு வழிவிடமாட்டார்கள் என்பதாக ஆகிவிட்டது.

தமிழ்நாட்டைச் சூழ்ந்த கேடு!

இதனிடையே, அவிநாசிலிங்கம் கல்வியமைச்சராக இருந்த போது ஆந்திராவில் உயர்நிலைப் பள்ளிவரை தெலுங்கு பயிற்சி மொழியாக்கப்பட்டதன் விளைவாக, தமிழ்நாட்டிலும் தமிழ் உயர்நிலைப் பள்ளிவரை பயிற்சிமொழியாக்கப்பட்டது. ஐந்தாம் வகுப்புக்கு மேல் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்றுக் கொடுத்தால் போதும் என்றும் ஆக்கப்பட்டது. பின்னர் சி. சுப்பிரமணியம் கல்வி யமைச்சரானபோது, எல்லாக் கல்லூரிப் பாடங்களிலும் தமிழைப் பயிற்சிமொழியாக்கும் நோக்கத்துடன் இளங்கலை (B.A.) வரை தமிழ் பயிற்சிமொழி யாக்கப்பட்டது.

ஆனால், *1962*-இல் நடந்த பொதுத் தேர்தலில் சி. சுப்பிரமணியம் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தில்லியமைச்சராகி விட்டதால், தமிழ்நாட்டில் பத்தவச்சலம் கல்வியமைச்சராக்கப்பட்டார். அதோடு தமிழுக்குக் கேடு சூழ்ந்தது!

1962-இல் தொடங்கிய இந்திய — சீனப்போரின் விளைவாகப் பிறப்பிக்கப்பட்ட நெருக்கடிநிலைக் காலச் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு பத்தவச்சலம், தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியொன்றிலும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியொன்றிலும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளைத் தொடங்க ஆணையிட்டதுடன், ஆங்கிலப் பயிற்சி வகுப்பைத் தொடங்க எந்தப்பள்ளி இசைவு கேட்டாலும் உடனே வழங்கவேண்டும் என்றும் அரசாணை பிறப்பித்தார். அதுவரை ஆங்கிலம் ஒரு பாடமாகக்கூட இல்லாதிருந்த தொடக்கப் பள்ளிகளின் மேல்வகுப்புகளிலும் ஆங்கிலப் பாடம் திணிக்கப்பட்டது.

அதுமட்டுமின்றி, சட்டமன்றக் கல்விக்குழுவைக் கூட்டித் தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டத்தைக் கைவிடுவதற்கு ஆதரவாக முடிவெடுக்க வைத்தார். இதற்குப் பச்சைத் தமிழர் காமராசரும் மெச்சித் துணையிருந்தார். திராவிடர் கழகம் பேராயக் கட்சியை ஆதரித்துக் கிடந்தது. தி.மு.க.வோ, அதுதான் அன்று சட்டமன்றத்தில் தலையாய எதிர்க்கட்சி. தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டத்தைக் கைவிட முடிவெடுத்த கல்விக்குழுவிலும் தி.மு.க. இருந்தது என்பதும், தமிழுக்கு இழைக்கப்பட்ட இந்த முறைகேட்டிற்குத் தி.மு.க.வினரும் துணை போனார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

இரண்டாம் இந்தியெதிர்ப்புப் போர்!

மேலும் 1963-இல் பேராயக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் காமராசர் தில்லிக்குச் சென்றதால், தமிழ்நாட்டின் முதலமைச்சராகவே ஆன பத்தவச்சலம், தமது தமிழ் ஒழிப்புத் திட்டத்தை முரட்டுத்தனமாக நடத்தத் தொடங்கினார்.

ஆனால், இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டபடி 1964-இல் இந்தி ஆட்சிமொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்ததால், அதை எதிர்த்தாக வேண்டிய கட்டாயத்திற்குத் தி.மு.க. தள்ளப்பட்டது. ஆங்கிலத்தைப் பொறுத்தவரை உடன்பாடாக இருந்தாலும், தமிழக முதலமைச்சர் என்ற முறையில் பத்தவச்சலம் அதை வன்கண்மையாக அடக்க முற்பட்டார். தவிரவும் அந்த இரண்டாவது இந்தியெதிர்ப்புப் போரைத் தி.மு.க. விடமிருந்து தமிழ் இயக்கங்களும், தமிழக மாணவர்களும் தங்கள் கையில் எடுத்துக் கொண்டதால், பத்தவச்சலத்தின் அடக்குமுறை தயக்கமின்றி நடந்தது.

இராசாசிக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு!

அப்போது சுதந்திராக் கட்சியை நடத்திக் கொண்டிருந்த இராசாசி முன்பு இந்தியெதிர்ப்புப் போரின் மூலமே தன்னைப் பதவியிறங்கச் செய்ததற்குப் பழிக்குப் பழிவாங்க இதுதான் தக்க சமயம் என்று கருதி, 1964-ஆம் ஆண்டு இந்தியெதிர்ப்புப் போரில்

தம்மையும் இணைத்துக்கொண்டு அதை ஆங்கில ஆதரவுப் போராட்டமாக மாற்றினார். தமிழ் மறவர் படையாக உருவாகி யிருக்க வேண்டிய மாணவர் குமுகாயத்தை "இந்தி ஒருபோதும் கூடாது. எங்கும் எதிலும் ஆங்கிலமே வேண்டும்" (Hindi Never; English ever.) என்ற முழக்கத்தை முன்வைத்து ஆங்கில அடிமைக் கூட்டமாகத் திசைதிருப்பினார். அதை அண்ணாவும் ஆதரித்தார்.

இதற்குத் திராவிடக் கட்சிகளின் துணையுடன் பேராயக் கட்சியின் அமைச்சர் பத்தவச்சலம் ஐந்தாண்டுகளாகப் போட்ட ஆங்கில அடித்தளமும் காரணம் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆம்; பத்தவச்சலத்தின் அத்தமிழ் ஒழிப்பு வேலையைப் பெரியாரும் ஆதரித்தார். "ஆங்கிலத்தை ஆட்சிமொழி—பயிற்சிமொழியாக மட்டுமில்லாமல், வீட்டுக்கு வீடு பேசுகின்ற மொழியாகவும் ஏற்றுக் கொண்டால்தான் தமிழர்கள் முன்னேற முடியும்" என்று அறிக்கை களும் வெளியிட்டார். (*'விடுதலை' 1963/64-ஆம் ஆண்டின் இதழ்கள்.*)

குல்லுகபட்டரின் குத்தல்!

இந்தப் பின்னணி இராசாசி கூட்டத்திற்கு இன்னும் தெம்பை ஊட்டியது. அதனால் திராவிட மாணவர்களின் கோட்டை என்று கருதப்பட்ட சென்னை பச்சையப்பன் கல்லூரியிலேயே *23-12-1962-இல்* "ஆங்கிலத்தின் வாயிலாகப் பயிலாத கல்வி வட்டகை இல்லாத உந்த ஊர்தி (டயர் இல்லாத மோட்டார்) போன்றது. கல்லூரிப் படிப்பில்லாதவர்கள், படிப்பே இல்லாதவர்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு தமிழைப் பயிற்சிமொழியாக்குமாறு கேட்கிறார்கள்" என்று கூறி, தமிழுக்காகக் குரல் கொடுத்தவர்களைச் சிறுமைப்படுத்தினார்.

அதையொட்டிச் சென்னைச் சட்டக் கல்லூரியில் நடந்த ஒரு கூட்டத்தில் அண்ணாவையும் அருகில் வைத்துக்கொண்டு "இந்தியெதிர்ப்புக் கூட்டம் போல ஆங்கில எதிர்ப்புக் கூட்டம் போடுகிறார்களாம். ஆங்கில வல்லாண்மை (ஆதிக்கம்) என்ற பெயரே சரியில்லை. ஆங்கில வல்லாண்மை என்றால் என்ன? வல்லாண்மை என்பது மக்கள் மனநிலையைப் பொறுத்தது. அது மொழியின் உரிமையன்று" என்று, இந்தியையும் ஆங்கிலத்தையும் ஒருசேர எதிர்த்தவர்களை நையாண்டி புரிந்தார்.

காசி ஆனந்தன் பாடல்...

திராவிட மாணவர் ஒருவர்கூட இதை எதிர்க்கவில்லை. அன்று பச்சையப்பன் கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்த ஈழத்து உணர்ச்சிப் பாவலர் காசி. ஆனந்தன் இது கண்டு கொதித்தெழுந்தார். வேண்டுமென்றே ஆங்கிலத்தைத் திணித்த பத்தவச்சலம் பற்றி,

"பக்த வச்சலம் பாடையில் வரும்நாள்
தமிழர் விடுதலைநாள் — ஐயா
தமிழர் விடுதலைநாள் — அவர்
பாடைச் சடலத்தில் காறி உமிழும்நாள்
சபதம் தீரும்நாள் — எங்கள்
சபதம் தீரும் நாள்!

ஆங்கில மொழியைப் பாடமொழியாக்க
ஆயிரம் முயற்சிகள் செய்கிறான் அவன்
அப்பன் பெயரைத் தெரிஞ்சுக்க நாட்டில்
ஆர்வமுள்ளவன் துடிக்கிறான்...!"

—என்று ஓர் இசைப்பாடலை இயற்றினார். தேனிசைச் செல்லப்பாவால் இசையமைக்கப்பட்டு அப்பாடல் அப்போது 'நாம் தமிழர் இயக்க' மேடைகளில் எல்லாம் பாடப்பட்டது. ஒரு கூட்டத்தில் இப்பாடலைப்பாடி, அதற்கு விரிவாக விளக்கம் செய்ததற்காக அப்போது சென்னை மாநகரக் காவல்துறை ஆணையராக இருந்த குப்புசாமி அவர்களால் அழைக்கப்பட்டு, நான்கூடக் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருக்கிறேன்.

பன்முகப் பகை!

அக்காலக் கட்டத்தில் திட்டமிட்டு வளர்க்கப்பட்ட ஆங்கிலக் கவர்ச்சியும், அப்பின்னணியில் உருவாகி வந்தவர்களே இன்று தமிழகத்தின்—தலைவர்களாக—அதிகாரிகளாக—அலுவலாளர்களாக இருக்கின்ற நிலையும்தான் இன்றும் தமிழை ஆட்சிமொழியாக—பயிற்சிமொழியாக ஆகவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றன என்றால் மிகையாகாது.

ஆகவே, பத்தவச்சலம் மட்டுமே இந்தியெதிர்ப்பின் பகைவர் என்று கூறிவிடமுடியாது. அவருக்குப் பக்கத் துணையாக இருந்தவர்களும், அவர் அப்பாதையில் நடைபோடத் தடம் அமைத்துக் கொடுத்தவர்களும் இந்தியெதிர்ப்பின்—தமிழ் ஆதரவின் பகைவர்களே.

பசப்பல் மொழி!

ஏனென்றால், அந்தப் பத்தவச்சலம் கூட 27-9-1964-இல் அப்போது அவருக்கு எதிராக—அவருடைய ஆங்கிலத் திணிப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த ம.பொ.சி.க்கு எழுதிய ஒரு மடலில்,

"தமிழ் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பாடுபடுவதில் எனக்கு முழுமையான (பரிபூரண) ஆர்வம் உண்டு. என்னால் இயன்றதைச் செய்து கொண்டு வருகிறேன். ஆட்சிமொழி கையாளப்படும்

புலனத்தில் (விசயத்தில்) வேண்டிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி (போதனா) மொழியாக்குவதில் என்னைப் பொறுத்த மட்டில் எதிர்ப்பு ஒன்றுமில்லை. வேண்டிய ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது..." (ம.பொ.சி.யின் 'எனது போராட்டம்' நூல் : பக். 898.) என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்.

இதையேதானே இன்றைய ஆட்சியாளர்களும் சொல்கிறார்கள்?

மாணவர் உலகம் தமிழுக்குப் பகையா ?

1972 காலக் கட்டத்தில் கலைஞர் தமிழைப் பயிற்சி மொழியாக்கச் சட்டம் கொண்டுவந்ததையும், அதனைத் தி.மு.க.வின் எதிரிகள் மாணவர்களைத் தூண்டிவிட்டு எதிர்த்து முறியடித்ததையும் சுட்டிக் காட்டி "மாணவர்களிடையே தமிழுக்கு ஆதரவில்லையே! நாங்கள் என்ன செய்வோம்?" என்பதைப்போல் இன்றும் ஒரு சாட்டாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அப்போதும் இயல்பாக அது செய்யப்படவில்லை என்பதும், அப்போது காமராசரும் இராசாசியும் கைகோத்து நின்றதால், அவர்களை முறியடிக்க — தமிழ் மக்களைத் தமக்கு ஆதரவாகத் திருப்ப ஓர் உத்தி என்ற அளவிலேயே அது கையாளப்பட்டது என்பதும் கண்கூடு.

சாக்குச் சொல்லும் போக்கு !

இல்லையென்றால், தமிழ்ப் பயிற்சிமொழித்திட்டம் வேண்டுமா, வேண்டாமா என்பதை ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரைக்க ஆ. இலட்சுமணசாமி (முதலியார்) தலைமையில் ஒரு குழுவைக் கலைஞர் அமைத்திருக்க மாட்டார். ஏனெனில் இலட்சுமணசாமி தமிழுக்குப் பகைவர் என்பதும், அவர் துணைவேந்தராக இருந்தவரை சென்னைப் பல்கலைக் கழக வாயில்வரைகூடத் தமிழை நுழைய அவர் விடவில்லை என்பதும் நாடறிந்த உண்மை.

எனவே, தமிழால் வளர்ந்த பலரும் தமிழுக்குப் பகையாகத்தான் இருந்திருக்கிறார்கள் என்பதையும், இருந்து வருகிறார்கள் என்பதையும் மறைத்துவிட்டுப் பழி முழுவதையும் ஒருசிலர் மீதே போடுவது வருங்காலத் தலைமுறைக்குச் சரியான வழிகாட்டுவதாகாது. அவர்கள் இனிமேலும் போலிகளை நம்பி ஏமாறவே துணை செய்வதாகிவிடும். இதில் காய்தல், உவத்தல் இன்றி உண்மையை உடைத்துப் பார்ப்பதே எதிர்காலத்திலேனும் தமிழ் ஏற்றத்திற்கு ஆக்கம் செய்வதாகும்.

விளங்குமா நம்நிலம்?

— பாவலர் இளஞ்சித்திரன் —

எங்கும் ஆங்கிலம்! எதிலும் ஆங்கிலம்!
இதுதான் இன்றைய தமிழ்நாடு!
இங்கே ஆள்வார் எண்பார்க் கில்லை!
இதிலே கவலைப் பெரும்பாடு!

ஆளும் கட்சிகள்! அடுத்தெதிர்க் கட்சிகள்!
அவற்றிற் குக்குறி அரசியலே!
கோளும் இல்லை! கொள்கையும் இல்லை!
கொள்ளை போவன உரிமைகளே!

எங்கும் தமிழே! எதிலும் தமிழே!
என்பதெல் லாமே வெறும்பேச்சு!
இங்கே நம்மை ஏய்க்கின் றார்கள்!
இவர்கள் பித்தளை நகைப்பூச்சு!

தமிழைச் சொல்லித் தமிழைப் பேசித்
தமிழர் நிலத்தை விற்பவர்கள்!
தமிழை உயர்த்தும் நினைவே இல்லார்!
தமிழுக் கயலாய் நிற்பவர்கள்!

தன்மனை, வீடு, தோட்டம் என்று
தமிழைத் தெருவில் விட்டவர்கள்!
புன்செயல், ஆர வார வெளிச்சம்!
பொதுத்தொண் டில்மிகக் கெட்டவர்கள்!

அன்னைக் கிடுப்பில் துணிஒட் டில்லை!
யார்யார்க் கோகொடை செய்கின்றார்!
நன்மைக் கிவர்கள் நமக்கென் றில்லை!
நம்தலை களையே கொய்கின்றார்!

எங்கும் இந்தி! எதிலும் இந்தி!
இருந்தொரு பக்கம் நமைவெருட்டும்!
இங்கே தமிழர் இரண்டாம் மக்கள்!
இந்திய நாடே நமைமருட்டும்!

கேட்பார் ஒருவர் நமக்கென் றில்லை!
கேடுகள் சூழக் கிடக்கின்றோம்!
மீட்பார் எனநாம் நினைத்தவர் எல்லா(ம்)
மெய்ப்புக் காயினர்! நடக்கின்றோம்!

தமிழுக் கிங்கே வாழ்க்கை இல்லை!
தமிழ்மொழி இகழ்ச்சிக் கானதுவே!
தமிழுக் குரிமைகள் தலைமைகள் இல்லை!
தமிழ்நிலம் கெட்டுப் போனதுவே!

இங்கே யார்க்கும் வெட்கம் இல்லை!
இழிவு மானம் தெரியவில்லை!
வெங்கா யம்போல் இவர்தம் வீரம்!
விளங்குமா நம்நிலம்? புரியவில்லை! ❐

பாவலரேறு பிறந்தநாள் நிகழ்ச்சி – ஆவடி தமிழ்ப் பேரவை.

திபி. 2029 கும்பம் 24 ஞாயிறு (8.3.98), பிற்பகல் 2.30 மணியளவில் சென்னை – ஆவடியிலுள்ள தமிழ்ப்பேரவையின் சார்பில் கோயில்பதாகைத் திண்ணூர்தித் தொழிலக முத்தமிழ் மன்றத்தில் பாவலரேறு பிறந்தநாளை முன்னிட்டு திரு. செ.ப. முத்தமிழ்மணி தலைமையிலும், முனைவர் ச.முருகானந்தத்தை நெறியாளராகக் கொண்டும் உரையரங்கமும் கலந்துரையாடலும் நடைபெற்றன.

'பாவலரேறு பெருஞ்சித்திரனார் வாழ்வும் பணியும்' என்னும் பொருள் பற்றித் திருவாளர்கள் நல்லயம் பெருமாள், சோம. பொன்னுசாமி, ஐ. மனோகரன், சி.வ. வேலன், வ. மணிமாறன், தி. தாயுமானவன், வள்ளுவன், வளர்மதி, பொன். இராமசாமி, செயவேலு ஆகியோர் உரையாற்றினர்.

'தமிழர் முன்னேற்றம்' என்னும் பொருள்குறித்துக் கலந்துரையாடல் நடைபெற்றது.

பஃறுளி பதிப்பகம் இட மாற்றம்.

கடந்த ஆறு ஆண்டுகளாகச் சென்னை – திருவல்லிக்கேணியில் இயங்கிவந்த பஃறுளி பதிப்பகம் அண்மையில் சென்னைப் புறநகரான மேடவாக்கத்துக்கு இடம்பெயர்ந் துள்ளது. கடந்த கும்பம் 6 அறிவன் கிழமை (18.02.98) முதல் புதிய இடத்தில் பணி தொடங்கியது.

புதிய முகவரி: பஃறுளி பதிப்பகம், 70 வேளச்சேரி நெடுஞ்சாலை, மேடவாக்கம், சென்னை - 601 302.

நூழில் பதிப்பகம்.

சென்னை – திருவல்லிக்கேணி, வெங்கடரங்கம் தெரு 183-ஆம் எண் கட்டடத்தில் — பஃறுளி பதிப்பகம் இயங்கிவந்த இடத்தில் 'நூழில் பதிப்பகம்' என்னும் அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி இனவுணர்வு நூல்களும் ஏடுகளும் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

செய்திகள்

தமிழ்ப்புத்தாண்டு – பொங்கல் விழா!
பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளி – குன்றத்தூர்

சென்னை–குன்றத்தூர்ப் பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளியின் சார்பில் தமிழ்ப்புத்தாண்டு–பொங்கல் விழா தி.பி. 2028 சிலை 25 வெள்ளி (9.1.98) பிற்பகல் 2.30 மணிக்கு, பள்ளியின் கூடத்தில் வள்ளுவர் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. ம. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் தலைமையாசிரியர் திரு. உதயகீரன் வரவேற்றுப் பேசினார். குமுகாய இழிவுகளை அழிக்கும் பொருளார்ந்த போக்கி நிகழ்ச்சியைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் புனைவுப் போட்டியும் சிறப்புற நடைபெற்றன. பாவேந்தர் இலக்கிய மன்றத் தலைவர் திரு. சிறுகை சித்தரை நடுவராகக் கொண்ட பட்டிமண்டபத்தில் பங்கேற்று மாணவர்கள் திறம்பட வழக்காடினர்.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பள்ளியின் தாளாளர் வெற்றிச் செழியன் நன்றி நவின்றார்.

தந்தை பெரியார் தமிழ் இசை மன்றம் ஆறாம் ஆண்டு விழா!

தந்தை பெரியார் தமிழ் இசை மன்றத்தின் ஆறாம் ஆண்டுவிழா, சென்னை – தியாகராயர் நகர் செருமன் மண்டபத்தில் கடந்த சிலை 8 அறிவன் (21.1.98) முதல் ஒருகிழமைக் காலம் அன்றாடம் மாலை 5 மணி முதல் இரவு 9.30 வரை நடைபெற்றது. இசைப் பேரறிஞர் மதுரை சோமு பெயர் தாங்கிய இசையரங்கத்தில், திருக்கண்ணபுரம் செயச்சந்திரன் குழுவினரின் நாகசுர இசையுடன் தொடங்கிய இவ் விழாவில் ஒவ்வொரு நாளும் இரு குழுவினரின் இசையரங்குகளும் நிறைவு நிகழ்ச்சியாக நாட்டிய அரங்கும் சிறப்புற நடைபெற்றன.

நாள்தோறும் தமிழறிஞர்களும் கலை வல்லுநர்களும் தலைமை தாங்கியும் முன்னிலை யேற்றும் பாராட்டி வாழ்த்திப் பேசினர். நிறைவு நாளில் அரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேல், திருக்கண்ணபுரம் எசு. செயச்சந்திரன், தில்லை துரை. பாலசுப்பிரமணியம், பி. பாலசுப்பிரமணியம், ஆண்டாங்கோயில் ஏ.வி.எசு. சிவகுமார், வி.கே. மணிமாறன் ஆகியோர் 'தமிழிசைப் பாணர்' என்னும் விருதும், உவமைப் பாவலர் சுரதா, பழம்பெரு நடிகை சி.டி. இராசகாந்தம், பழம்பெரு நடிகர் பி.ஏ. சொக்கலிங்கம் ஆகியோர் பொற்கிழியும் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றனர்.

எல்லா நாளிலும் முனைவர் சிலம்பொலி செல்லப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். நிறைவுநாளில் மன்றத்தலைவர்

நா. அருணாசலம் நன்றியுரையாற்றினார். கலைமாமணி முத்துக்கூத்தன், அ. சௌரிராசன், மு. கலைவாணன் முதலானோரால் விழா நிகழ்ச்சி ஏற்பாடுகள் திறம்படச் செய்யப்பெற்றிருந்தன. நாள்தோறும் மக்கள் திரளாக வருகை தந்தது குறிப்பிடத்தக்கது.

சென்னை நடுவண் சிறையில் புதுக்கோட்டை இரா. பாவாணன்.

புதுக்கோட்டைத் தென்மொழி அன்பர் இரா. பாவாணன் அவர்கள் (ம.தி.மு.க.), கடந்த சுறவம் 8 அன்று (21.01.98) புதுக்கோட்டையில் காவல் துறையினரால் தளைப்படுத்திக் கொணரப்பட்டுச் சென்னை நடுவண் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டுள்ளார். சட்டப் புறம்பான செயல்கள் என்கிற சட்டப்படியும், இந்தியத் தண்டனைச் சட்டப்படியும் சைதை வழக்கு மன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பினும், அவர் பிணையலில் வெளிவர முடியாதபடி இப்போது அவர்மீது தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய்ச்சப் பட்டுள்ளது. உடல்நலங் குன்றி மருத்துவம் செய்யப்பெற வேண்டிய நிலையில் திரு. பாவாணன் சிறையில் உள்ளார்.

தென்மொழியின் சார்பில் புலவர் இறைக்குருவனார், திரு. மா. பூங்குன்றன் ஆகியோர் கும்பம் 5 செவ்வாய் (17.02.98) அன்று சிறைச்சாலையில் திருபாவாணனைச் சந்தித்து அளவளாவினர். அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாகவே, கலைஞர் அரசு தம்மை அடுத்தடுத்துச் சிறைப்படுத்துகிறதென்றும், என்ன இடர்வரினும் எதிர்கொள்ளத் தாம் அணியமாக இருப்பதாகவும் திரு. பாவாணன் கூறினார்.

திருவள்ளுவர் மழலையர் பள்ளி – திருவான்மியூர்.

சென்னை – திருவான்மியூர்த் திருவள்ளுவர் மழலையர் பள்ளியின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் விழா, தி.பி. 2029 சுறவம் 11 காரி (24.1.98) அன்று 'தென்மொழி' ஆசிரியர் திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று காலை 10 மணிக்குத் தொடங்கி எழுச்சியுற நடைபெற்ற ஊர்வலத்தில் பள்ளி மாணவர்களுடன் பொதுமக்களும் பங்கேற்றனர். 11.30 மணிக்குப் பள்ளியில் நடைபெற்ற கூட்டத்தில் பள்ளியின் தலைமையாசிரியர் இறை. பொற்கொடி வரவேற்புரையாற்றினார். திரு.சீ. அறிவுடைநம்பி (எண்ணூர்ப் பைந்தமிழ்ப் பாசறை), திரு. வே...யுமணி (மக்கள் எழுச்சி மன்றம்), சிவலிங்னம், நடன ஆசிரியர் செந்தி...தன் ஆகியோர் பேசினர். குன்றத்தூர்த் தமிழ் அறிவியல் மன்ற ஒருங்கிணைப்பாளர் திரு. வெற்றிச்செழியனை நடுவராகக் கொண்ட பட்டிமண்டபத்தில் மாணவர்கள் பங்கேற்றுச் சிறப்புற வழக்காடினர்.

விழாவில் கலந்துகொண்டு திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் சிறப்புரையாற்றினார். செல்வி அங்கயற்கண்ணி நன்றி நவின்றார்.

தாய்த்தமிழ்ப் பள்ளியில் கலந்துரையாடல் — கோபி.

தமிழ்ப் பயிற்று மொழிப் பள்ளிகளை விரிவாக உருவாக்குவது பற்றியும் கோபியில் உள்ள தாய்த் தமிழ்ப்பள்ளியின் வளர்ச்சி பற்றியும் கலந்துரையாடல் ஒன்று தி.பி. 2028 சுறவம் 18 (31.1.98) அன்று நடைபெற்றது. கோபித் தாய்த்தமிழ்ப் பள்ளியின் நெறியாளர்களான திருவாளர்கள் நிலாவேங்கடவன், தமிழரசு, இனியன், அன்பு முதலியோர் கலந்துகொண்டு அரசு நடைமுறைகளையும் பல பள்ளிகள் தொடங்குவதற்கான நடைமுறைகளையும் பற்றிப் பேசினர். சிறப்பு அழைப்பாளராகத் திரு. மா. பூங்குன்றன் கலந்துகொண்டார்.

பள்ளியில் புதிய பாடத் திட்டங்களையும் வழிவகுப்பு முறைகளையும் பற்றி பேசப்பட்டது. பாவலரேறு, பாவேந்தர் ஆகியோரின் குழந்தைப் பாடல்களை நூல்வடிவப் படுத்தியிருப்பதோடு பாடத் திட்டத்தில் இடம்பெறச் செய்திருப்பது பள்ளியின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

உறந்தைத் தமிழ்க் கழகம் – பாவாணர் விழா!

தி.பி. 2029 சுறவம் 28 செவ்வாய் (10.02.98) அன்று, திருச்சி – உறையூர் இராமகிருட்டிணா நடுநிலைப் பள்ளியில், உறந்தைத் தமிழ்க் கழகச் சார்பில், செயலாளர் திரு. உறந்தைப் பன்னீர்ச்செல்வம் தலைமையிலும் திரு. துரை. இராசேந்திரன் முன்னிலையிலும் மொழிஞாயிறு பாவாணா விழா நடைபெற்றது. திரு. முருகப்பன் வரவேற்றுப் பேசினார். திரு.த. தமிழ்த் தென்றல், திரு. குறள்மொழி மூர்த்தி, திரு. ஈகவரசன் ஆகியோர் உரையாற்றினர். புலவர் இரா. இளங்குமரனார் மொழிஞாயிறு பாவாணர் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரை நிகழ்த்தினார். திரு. த. மயில்வாகனன் நன்றி நவின்றார்.

திருக்குறள் நாவை சிவம், திண்டுக்கல் தமிழ்க்கதிர், இரும்பொறை, ஆ.வே. இராமசாமி, 'வேர்கள்' இலெனார்டு, பாவலர் சிங்காரவேலன், பொறி. அமலன், அறவேந்தன், பழனியாண்டி உள்ளிட்ட தமிழார்வலர்கள் பலர் விழாவில் கலந்துகொண்டனர்.

மாறனின் தாயார் மறைவு.

தமிழீழத் தொடர்பாக இந்திய அரசு பொய்ச் செய்தி பரப்பி வந்ததைக் கண்டிக்கும் போராட்டத்தில் தம் இன்னுயிரை மாய்த்துக்கொண்ட வீர இளைஞர் திரு. இரா. மாறன் அவர்களின் அன்னையாரும், திரு. இராதாகிருட்டிணன் அவர்களின்

துணைவியாருமான திருவாட்டி பாளையம்மாள் (அகவை 54) கடந்த சில மாதங்களாக நோய்வாய்ப் பட்டிருந்து, மருத்துவம் செய்தும் அது முழுமையாகப் பயனளிக்காத நிலையில் சுறவம் 30 வியாழன் (12.2.98) இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அன்று மாலை 5 மணியளவில் புதுவண்ணை யிலுள்ள அன்னாரது இல்லத்தினின்று புறப்பட்ட இறுதி ஊர்வலத்தில் தமிழன்பர்களும் இயக்கத்தவர்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.

பாவாணர் பிறந்தநாள் விழா – தமிழ்ப் பேரவை ஆவடி.

சென்னை – ஆவடித் தமிழ்ப் பேரவையின் நான்காம் ஆண்டுத் தொடக்க விழாவும் மொழிஞாயிறு பாவாணர் பிறந்தநாள் விழாவும் இணைந்த விழா, தி.பி. 2029 கும்பம் 2 காரி (14.02.98) அன்று மாலை அறிஞர் அம்பேற்கர் அரங்கத்தில் நடைபெற்றது.

திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் தலைமைதாங்கினார். பேரவைச் செயலாளர் திரு. செ.ப. முத்தமிழ்மணி வரவேற்புரை நிகழ்த்தினார். தவத்திரு மறைமலையடிகளார், பாவேந்தர் பாரதிதாசன், மொழிஞாயிறு பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் படங்களைத் திறந்து வைத்துப் புலவர் வே. தமிழ்மாறன் (தநா.மா.இலெக.) உரையாற்றினார். பாவாணரின் வாழ்வும் பணியும் பற்றிச் சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார் சிறப்புரை நிகழ்த்தினார். மறை. திரு. தாயுமானவன் நன்றி நவின்றார்.

நெய்வேலியில் முப்பெருவிழா!

நெய்வேலி உலகத் தமிழ்க் கழகம் சார்பில் திருவள்ளுவர் விழா, பாவாணர் விழா, பணி ஓய்வு பாராட்டு விழா என்னும் முப்பெருவிழா நகர்க்கூறு - 20 திருவள்ளுவர் கோட்டத்தில் தி.பி. 2029 கும்பம் 17 ஞாயிறு (1.3.98) அன்று சுரங்கத் துணைத் தலைமைப்பொறியாளர் அவர்கள் திரு. கு. முகிலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உ.த.க. தலைவர் தா. அன்புவாணன் வரவேற்புரை யாற்றினார். அ.மி. நிலையத் தலைமைப் பொறியாளர் க. தாமரைச்செல்வன் திருவள்ளுவர் விழா உரையும், புலவர் இரா. இளங்குமரனார் பாவாணர் விழா உரையும், நடுவர் இராதாகிருட்டிணனார், மருதூர் பா. அரங்கராசனார் ஆகியோர் பணிஓய்வு பாராட்டுவிழா உரையும் நிகழ்த்தினர். பணி ஓய்வு பெற்றோர் பதினைவர் பாராட்டப் பெற்றனர். திரு.வெ. அருளின்பன் நன்றி நவின்றார்.

வேங்கடேசன் – பவானி வாழ்க!

'தென்மொழி' இதழ் மற்றும் நூல் வெளியீட்டுகளுக்கான அச்சுப் பணிகளுக்குத் துணை நிற்பவரும், கணியச்சு வல்லுநரும், சென்னை சேப்பாக்கம் திரு. இரா. துளசி அவர்களின் மகனுமான

செல்வன் வேங்கடேசனுக்கும், சென்னை – தண்டையார்பேட்டை திரு. ஆ. தாமோதரன் அவர்களின் மகள் செல்வி பவானிக்கும் தி.பி. 2029 கும்பம் 27 அறிவன் (11.03.98) அன்று சென்னை – வண்ணாரப்பேட்டையில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் எல்லா வளனும் பெற்று நீடுவாழத் தென்மொழியின் நல்வாழ்த்துகள்!

புதுவைப் பல்கலைக்கழகத்தில் அறிஞர் வ. சுப. மாணிக்கனார் பேராசிரியர் ச. மெய்யப்பனார் அறக்கட்டளைப் பொழிவு!

புதுவைப் பல்கலைக்கழகத்தில் தி.பி. 2029 மீனம் 5-ஆம் நாள் (19.3.1998) வியாழக்கிழமை அறிஞர் வ.சுப. மாணிக்கனார் பேராசிரியர் ச. மெய்யப்பனார் அறக்கட்டளைப் பொழிவு, துணைவேந்தர் முனைவர் சிவ.வி. நாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழியல் துறைத்தலைவர் முனைவர் க.ப. அறவாணன் அவர்கள் அறிமுக உரையும் முனைவர் பட்ட ஆய்வாளர் மு. பழனியப்பன் அவர்கள் வரவேற்புரையும் ஆற்றினர்.

'அறிஞர் வ.சுப. மாணிக்கனார் கருதிய தமிழர்' என்னும் தலைப்பில் தென்மொழி அன்பரும், மாயனூர் மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவன முதுநிலை விரிவுரையாளருமான முனைவர் கடவூர் மணிமாறன் அவர்கள் அறக்கட்டளைப் பொழிவு நிகழ்த்தினார். முனைவர் இளமதி சான்கிராமன் நன்றி நவின்றார்.

மொழிஞாயிறு பாவாணர் விழா!

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் விழா, தி.பி. 2029 மீனம் 7 காரி (21.3.98) மாலை 5 மணியளவில், சென்னை–திருவல்லிக்கேணி, இந்து மேனிலைப்பள்ளி அரங்கில் பாவாணர் விழாக்குழுவின் சார்பில் புலவர் கி.த. பச்சையப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. க. தமிழமல்லன் அனைவரையும் வரவேற்றார்.

புலவர் இறைக்குருவனார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பாவரங்கில் திருவாளர்கள் முனைவர் கடவூர் மணிமாறன், ஓவியப் பாவலர் வலவன், பாவலர் இளமாறன், முனைவர் தமிழப்பன், முனைவர் அரணமுறுவல், பாவலர் அரசு, பாவலர் முத்தமிழ்மணி, பாவலர் இளஞ்சேரல், பாவலர் செந்திலாண்டவன் ஆகியோர் பாவாணரின் பல்வேறு சிறப்புகள் குறித்தும், பாவாணர் வழியில் மேற்கொள்ளப் படவேண்டிய பணிகள் குறித்தும் பாப் பொழிந்தனர்.

தமிழ் ஆட்சிமொழி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் முனைவர்

இரா. இளவரசு 'பாவாணரின் மொழிநூல் ஆய்வு' என்னும் பொருள் பற்றியும், முனைவர் கு. திருமாறன் 'பாவாணரும் தனித்தமிழும்' என்னும் தலைப்பிலும் உரையாற்றினர். திரு.தே. மணி நன்றி நவின்றார்.

திருக்கோயில்களில் தமிழ் வழிபாடு கோரி
1000 பேர் பங்கேற்ற மக்கள் தொடரி!

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு நடத்தக் கோரி, தி.பி. 2029 மீனம் 13 வெள்ளி (27.3.98) அன்று, காஞ்சிபுரத்தில் மக்கள் எழுச்சி மன்ற ஒருங்கிணைப்பிலான தமிழ் வழிபாட்டுரிமை, கோருங் கூட்டமைப்பின் சார்பில் தமிழ் இன நல இயக்கங்களைச் சார்ந்தோரும் பொதுமக்களுமாக ஆயிரம் பேர் பங்கேற்ற மக்கள் தொடரி (மனித சங்கிலி)ப் போராட்டம் நடைபெற்றது.

அன்று (27.3.98) மாலை 5 மணிக்கு, காஞ்சிக் காமாட்சியம்மன் கோயில் முன், மக்கள் எழுச்சி மன்ற ஒருங்கிணைப்பாளர் திரு. ப. வேலுமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் தொடரியைத் தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில் திரு. வெற்றிச் செழியன் (பாவேந்தர் தமிழ்வழிப் பள்ளி), திரு. செல்வநம்பி (யோகநாதன் — தமிழக இளைஞர் முன்னணி), திருவாட்டி இறை. பொற்கொடி (திருவள்ளுவர் மழலையர் பள்ளி), திரு. க. கோதண்டம் (சமூகநீதிப் பேரவை), திரு. நடராசன் (மார்க்கசிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி), திரு. வெற்றிச்செல்வன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), திரு. சேகர் (தூய்மை — பசுமை இளைஞர் மன்றம்), திரு. மா.செ. தமிழ்மணி (உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்), முனைவர் ந. அரணமுறுவல் (தமிழியக்கம்) ஆகியோர் உரையாற்றினர்.

திருவாட்டி இசைமொழி தீர்மானங்களை முன்மொழிந்தார். அவற்றை வழிமொழிந்து புலவர் இறைக்குருவனார் நிறைவுரை யாற்றினார். திரு. சாரநாத்து நன்றி நவின்றார். காஞ்சியை யடுத்த களக்காட்டூர், குருவிமலை, பெரியாநத்தம், சித்தாலப்பாக்கம், அரசாணிப்பாளையம், மாகறல் முதலான சிற்றூர்களிலிருந்தும் மக்கள் திரளாக வருகைதந்து போராட்டத்தில் பங்கேற்றனர்.

தமிழுரிமைக் கூட்டமைப்பு
பேரணி — பொதுக்கூட்டம்!

பொறியியல்—மருத்துவம் உள்ளிட்ட அனைத்துக் கல்வியையும் தமிழில் தொடங்கக் கோரித் தமிழுரிமைக் கூட்டமைப்பின் சார்பில் தி.பி. 2029 மீனம் 14 அன்று (28.3.98) சென்னையில் பல்வேறு தமிழ் இனநல இயக்கங்கள் பங்கேற்ற பேரணியும் பொதுக்கூட்டமும்

நடைபெற்றன. கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் புலவர் கி.த. பச்சையப்பன் அவர்கள் தலைமையில் சென்னை–அண்ணாசாலைப் பெரியார் சிலை அருகிலிருந்து அன்று மாலை 5 மணிக்குப் புறப்பட்ட பேரணி தமிழ்வழிக் கல்வி தொடர்பான கோரிக்கை முழக்கங்களுடன் எழுச்சியுறச் சென்று பொதுக்கூட்டம் நடைபெற்ற திருவல்லிக்கேணிப் பகுதியைச் சென்றடைந்தது.

கூட்டமைப்பின் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பதுமநாபன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புலவர் இறைக்குருவனார் (தென்மொழி அவையம்), திரு. ஆ. இராசேந்திர சோழன் (தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சி), முனைவர் ந. அரணமுறுவல் (தமிழியக்கம்), பேரா.பா. கல்யாணி (மக்கள் கல்வி இயக்கம்), திரு. பன்னீர்ச்செல்வம் (தமிழ்நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி), திரு. தமிழ்மணி (தமிழ் தமிழர் இயக்கம்) திரு. உலகமுதல்வன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), பாவலர் தமிழேந்தி (புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்), பேரா. ச. முருகானந்தம் (தமிழ்ப்பேரவை), திரு. நடராசன் (மக்கள் பண்பாட்டுப் பேரவை) ஆகியோர் உரையாற்றினர். பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் முந்நூறுபேர் பங்கேற்றனர்.

திருவள்ளுவர் மழலையர் பள்ளியின்
ஏழாவது ஆண்டு விழா.

சென்னை—திருவான்மியூர்த் திருவள்ளுவர் மழலையர் பள்ளியின் ஏழாவது ஆண்டு விழா தி.பி. 2029 மீனம் 21 அன்று (4.4.98) மாலை 5 மணிக்கு, சிறீவித்தியா திருமண மண்டபத்தில் 'நந்தன்' சிறப்பாசிரியர் முனைவர் சுப. வீரபாண்டியன் அவர்கள் தலைமையிலும், திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

திருவாட்டி மா. தேன்மொழியருளியின் தமிழ் வாழ்த்தொடு விழா தொடங்கியது. புலவர் இறைக்குருவனார் வரவேற்புரையாற்றினார். மாணவர் களின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. பேரா. அரிமா. அப்புராசு வாழ்த்துரை வழங்கினார். திருவாட்டி பூங்கயல் அம்மையார் மாணவர்களுக்குப் பரிசு வழங்கிப் பாராட்டினார். திரு. சா. சந்திரேசன் நிறைவுரையாற்றி னார். திருவாட்டி இறை. பொற்கொடி நன்றி நவின்றார்.

புலவர் குமர. தன்னொளியன், புலவர் சுந்தரராசன், க. குழந்தை வேலன், பாவலர் இளஞ்சித்திரன், பாவலர் இராமச்சந்திரன், திருவாட்டி உலகமுதல்வி முதலானோர் விழாவுக்கு வருகை தந்திருந்தனர்.

✻

‘பாவலரேறு தமிழ்க்களம்’ நோக்கி...

(மடல்கள்)

* அன்பும் மதிப்பும் மிக்க அம்மா அவர்களுக்கு,

உ.த.மு.க.வை இயங்கும்படி செய்ய வேண்டுகிறேன். அது மக்களோடு மக்களாகப் பழக வேண்டும். அப்படியானால்தான் ‘தமிழ்க்களம்’ அமைப்பு வெற்றி பெறும், அதுவே என் கருத்து.

— **அதியமான்**, உ.த.மு.க., துணைப்பொதுச் செயலர்
தாழையூத்து — நெல்லை.

* பேரன்புடையீர்,

தமிழ்க்களம் அறிக்கை கிடைத்தது. என்னால் கூடுமானதை என்றும் செய்திட அணியமாக உள்ளேன்.

— **அரு. கோபாலன்**, ஆசிரியர் **‘எழுகதிர்’**, சென்னை.

* பெருந்தகையீர்,

நான் எண்ணியவாறு தொகை அனுப்ப முடியா நிலைக்கு வருத்தம். விரைந்து தொகுத்து அனுப்பிய பின்னரே தமிழ்க்களத்திற்கு வருவேன்.

— **பேரா. அரங்கசாமி**, கோபி.

* அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய அம்மா அவர்கட்கு,

‘பாவலரேறு தமிழ்க்களம்’ அமையவும், பாவலரேறு அவர்களின் படைப்புகள் வெளிவரவும் என்னால் இயன்ற ஒத்துழைப்புகளை நல்க அணியமாய் உள்ளேன்.

— **இரணியன்**, கோவை.

* அன்பின்மிகு உடன்பிறப்பாளர் திருவாட்டி தாமரையார் அவர்களுக்கு,

பாவலரேறு அவர்களின் தமிழ்க்களத்தில் தமிழ்நெஞ்சங்களைக் கூட்டுவது மிகச் சிறந்தது: பாராட்டுக்குரியது. அவர் திட்டமிட்டு விட்ட பணியை நாம் விடாது—அவரின் செயல்களை முடித்தோம் என்றால், அதுதான் அவருக்கு செய்யும் நன்றி. என்னால் இயன்ற முழு ஒத்துழைப்பையும் என்றும் நல்குவேன்.

— இலக்கியக் காவலர் திருவள்ளூர் **பச்சையப்பனார்,** மணவாளநகர்

* தமிழ் நெஞ்சத்தீர்!

‘பாவலரேறு தமிழ்க்களம்’ — வளர அண்ணாமலை வளாகத் தமிழ் நெஞ்சங்கள் ஒத்துழைப்பு என்றும் உண்டு.

— முனைவர் ஆறு. அழகப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

✻ பேரன்புடையீர்,

நம் 'பாவலரேறு தமிழ்க்கள' அமைப்புப் பற்றிய ஆய்வுக் கூட்டம் நடக்கவிருப்பது அறிய மிகமிக மகிழ்ச்சி. கூட்டத்தில் எடுக்கப் படும் முடிவுக்கு இசைய மார்க்கசிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் செயல்பட உறுதி கூறுகிறேன்.

—வே. ஆனைமுத்து, பொதுச்செயலாளர் மா.பெ.பொ.கட்சி, சென்னை.

✻ அன்புக்குரியீர்,

பாவலரேறு அறிஞர் ஐயா அவர்களின் தமிழ்க்களக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஆர்வமிருப்பினும், 82 அகவையான எனக்கு என் இன்றைய உடல்நிலை இடம் கொடாது. கூட்டத்தில் எடுக்கும் முடிவுகளை நானும் ஏற்றுக்கொண்டு என்னாலியன்ற உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறேன்.

— 'தியாகி' மணி, நாகர்கோயில்.

✻ பெருமதிப்பிற்குரிய அம்மா அவர்கட்கு,

'தமிழ்க்களம்' அமைக்கவும், கனிச்சாறு தொகுப்புகள் வெளிவரவும் ஒல்லும் வகையான் எம் பங்களிப்பை இனிதே செய்வேன் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

— முனைவர் கடலூர் ப. மணிமாறன், கரூர்.

✻ அன்புநிறை தென்மொழி தமிழ்நெஞ்ச ஐயா அவர்கட்கு,

என் மூச்சு இயங்கும் வரை ஐயா பாவலரேறு வழியில், என் சிறிய தொண்டு உண்டு.

— மு. ஆறுமுகம், சாத்தனூர்.

✻ அன்புடையீர்,

'தமிழ்க்களம்' – அமைப்புக்கென என்னால் இயன்ற தொகையை உறுதியாய்த் தண்டி வழங்குவேன்.

— நாவை. இளஞ்செழியன், கருக்காடிப்பட்டி.

✻ பேரன்புடைய அம்மா,

வரும் ஆகத்து மாத இறுதிக்குள் தொகை திரட்டுதல் என்கிற பணியில் என் பங்களிப்பு கட்டாயம் இருக்கும்.

— பாவலர் தமிழ்க்கனல், தஞ்சை.

✻ பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய ஐயன்மீர்!

நம் அரும்பெறல் ஐயாவின் வழித் தொண்டாற்றுவேன். தமிழ்க்களம் தொடர்பாக என்னாலியன்றதைக் கட்டாயம் செய்வேன்.

— குழந்தை ஈகவரசன், திருச்சி.